பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 13 | புதன்கிழமை | (25-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 68

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## தமிழ்த் தேசியத்தின் அபிலாசைகளை அடைய

# தமிழ்க் கூட்டமைப்பை புலிகள் ஆதரிக்கின்றனர்

## இளம்பரிதி பகிரங்க அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம், இழப்புக்கள் இல்லாமல், அழிவுகள் இல்லாமல் தமிழ்த் தேசியத்தின் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்காக ஒன்றுபட்டு ஓரணியில் நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எமது முழுமையான ஆதரவை வழங்கி நிற்கிறோம்.**

**இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.**



எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டையும் முடிபையும் வெளிப்படுத்தும் வகையில் யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நேற்று நடாத்தினர்.

இச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, இளம்பரிதி புலிகளின் தேர்தல் நிலைப்பாட்டை தெளிவாகக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;

காலாதிகாலமாக இலங்கையின் சட்ட அமைப்புக்கள், தமிழ் மக்களைப் பாதிக்கின்ற நடவடிக்கைகளையே மேற்கொணடு வந்துள்ளன.

இதன்காரணமாகவே 1974ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

1976ம் ஆணடு தந்தை செலவா "சிங்களவர் எம்மை அடக்கி ஒடுக்காமல் இருக்கும்வரை, நாம் அவர்களோடு சமமாக வாழ்வோம். அடக்கி ஒடுக்கினால் எனக்குப் பின்னால் வருகின்ற சந்ததியினர் அதனை எதிர்த்துப் போராடுவர்" என்று பாராளுமன்றில் விளக்கிக் கூறினார்.

இதனடிப்படையிலேயே தமிழர் அடக்கி ஒடுக்கப்பட்டதால் எமது மக்களின் உரிமைகளை மீக, அவர்களை சம அந்தஸ்துடன் சுதந்திர மானவர்களாக வாழ வைக்க, எமது தலைவர் வே.பிரபாகரனால் தமிழர் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

17,717 மாவீரர்களையும், 82ஆயிரம்

(10ம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் 19 கட்சிகளுடன் 200 சுயேட்சைகளும் போட்டி

(கொழும்பு)

ஏப்பிரல மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது நேற்று நண்பகல் 12.00மணியுடன் முடிவடைந்த நிலையில் 19 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 200சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு வேட்பு மனுக்கள் தாக்கல செய்வது நிறைவானதைத் தொடர்ந்து நண்பகல் 12.00மணி முதல் பிற்பகல் 1.30மணிவரை தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகளை அடுத்து 7அரசியல் கட்சிகளினதும், 7 சுயேட்சைக குழுக்களினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில் கொழும்பு, கண்டி, திருகோணமலை, குருநாகல் மாவட்ட சுயேட்சைக் குழுக்களது வேட்பு மனுக்களும் அடங்கும்.

பதுளை மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சிகளின் வேட்பு மனுவும், களுத்துறை,காலி மாவட்டங்களில்

(10ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் குலையாதவாறு தேர்தல் நடத்தப்பட வேண்டும்

### பிரி.வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

(லண்டன்)



ஏப்பிரல் மாதம் 2ம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிதலைவர்கள் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன் படிக்கையை அனுசரித்து அது சிதறாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஒபிறெய்ன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளை, நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் பாதிக்குமென லண்டனில் ஆராயப்பட்ட கூட்டம் ஒன்றின் போதே பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மைக் ஒப்பிறெய்ன் மேற்கண்டவாறு அரசியல் கட்சித் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன் படிக்கை முறிவடையும் பட்சத்தில் சமாதான நடவடிக்கைகளை மேற்

(10ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் 1274 பேர் யாழ்.மாவட்டத்தில் கடமை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்க ஆயிரத்து 274 கண்காணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 2ம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்திலிருந்து 8கட்சிகளும், 2சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன.

இத தேர்தலுக்கு முந்திய காலம், மற்றும் தேர்தல் தினம் ஆகியவற்றில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக் கூடிய சாத்தியப்பாடுகள் தோன்றியுள்ள நிலையில் மேற்படி சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள 582 வாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பு நடவடிக்கையில்

(10ம் பக்கம் பார்க்க)

## "வீடு" சின்னத்திற்கு எதிராக ஈ.பி.டி.பி மனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) "வீடு" சின்னத்தில் போட்டியிடுவது சட்டத்திற்கு முரணானது என எதிர்ப்புத் தெரிவித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மனுவொன்றைத் தேர்தல் ஆணையாளரிடம் கையளித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவராக இருப்பவர் சின்னத்துரை எனவும் அவர் தற்போது வெளிநாட்டில் இருப்பதனால்;

வீடு சின்னத்தில் போட்டியிடுவது தேர்தல் சட்டத்திற்கு முரணானதெனவும் தெரிவித்தே தமது மனுவை ஈ.பி.டி.பி, தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

### வடமராட்சி மீனவர் கண்டனக் கூட்டம்

(பருத்தித்துறை)

இந்திய மீனவர்களால் பருத்தித்துறை மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று கண்டனக் கூட்டம் நடாத்தப்படவுள்ளது.

இக் கூட்டம் சுப்பர் மடம் தேவாலயத்திற்கு முன்பாக காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்திற்குட்பட்ட மீனவர்கள் இன்று கடற்தொழி லுக்குச் செல்லாது தமது கண்டனத் தைத் வெளிப்படுத்தவுள்ளனர். (ச-52)

## கிளிநொச்சியில் தேர்தலை நடத்த ஏற்ற வசதிகள் செய்துதர முடியும்

### அரச அதிபர் யாழ்.அரச அதிபருக்கு கடிதம்

(கிளிநொச்சி)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க முடியும் என்று கிளிநொச்சி அரச அதிபரும், யாழ். மாவட்ட மேலதிக தெரிவத்தாட்சி அலுவலருமான தி.இராசநாயகம், யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் யாழ் மாவட்ட அரச அதிபருமான செபத்மநாதனுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடத்துவதற்குரிய பாடசாலைகள், கட்டடங்கள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை நடாத்துவதற்கு

(10ம் பக்கம் பார்க்க)

### மீனவரைத் தேடும் பணி மிகத் துரிதம்

(திருநெல்வேலி)

நேற்று முன்தினம் காலை பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மேற்கொண்ட அடாவடித்தனங்களின் போது காணாமல்போன வடமராட்சிப் பகுதி மீனவர் ஒருவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றைய தினம் வடமராட்சிப் பகுதி மீனவர்கள், சுமார் 14 படகுகளில் சென்று கடலில் தேடுதல் நடாத்தினர். ஆயினும் காணாமல் போன மீனவரின் நிலை குறித்து எதுவித தடயங்களும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. (உ-43)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## பொதுமக்களுக்கான ஓர் அறிவித்தல்

மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் பல வீதிகளில் பல்வேறு வகையான கட்டிடப் பொருட்கள், கழிவு இரும்புகள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றவை பொறுப்பற்ற விதத்தில் பொதுமக்களினால் போடப்படுவதினால் வாகனப்போக்குவரத்திற்கு இடையூறாகவும், வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகளாகவும் அமைந்துள்ளதனால் அவ்வாறான பொருட்களை எக்காரணம் கொண்டும் வீதிகளில் போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். நகர மக்கள் அனைவரையும் தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தவறுவோருக்கெதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-7289)


## இசை ஆராத்னை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி அருள் மிகு ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் கோவில் மண்டலாபிஷேக விழாவையொட்டி நடாத்தப்பட்டு வரும் இசை ஆராதனை இன்று புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு ம.தயாபரனின் பாட்டுக்கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ-18)

## இலட்சார்ச்சனை

(தொல்புரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள தேவஸ்தான இலட்சார்ச்சனைப் பெருவிழா நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமைநடைபெறவுள்ளது.

## காலாவதியான பொருள்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் உள்ள கடைகளில் ஒரு தொகுதி காலாவதியான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

அண்மையில் யாழ். மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழு திடீர் பரிசோதனையை மேற்கொண்டபோது கடைகளில் இருந்த காலாவதியான கச்சான், பிஸ்கட், அப்பிள், தோடம்பழம், சர்க்கரை, முந்திரிப் பருப்பு போன்ற உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. (தி-03)


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளைப் போட்டு இயந்திரம் மூலம் கூட்டெரு தயாரிப்பதற்குப் பொருத்தமான 10 பரப்புக்குக் குறையாத நிலத்தினை நீண்ட கால குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மாநகரசபை எல்லைக்குள் அல்லது அதனுடன் அண்டிய பகுதிகளில் இவ்வாறான காணிகளைக் குத்தகைக்கு விட விரும்புவோர் அதன் விஸ்தீரணம், அமைவிடம் என்பவற்றைக் குறிப்பிட்டு சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-7288)


## வாக்குப் பதிவுக்கு மின்னணு இயந்திரம் 543 தொகுதிகளிலும் பயன்படுத்தப்படும்

(சென்னை)

தேர்தல் ஆணையர் பி.பி.சங்கர் நாளை மறுநாள் சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின பரதிநிதிகளுடன் தேர்தல் குறித்த பல்வேறு விடயங்கள் பற்றி ஆலோசனை நடத்தவிருக்கிறார்.

இந்தத் தகவலை மாநில தேர்தல் தலைமை அதிகாரி சாரங்கி சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பான பயிற்சித் திட்டத்தையும் அவர் துவக்கிவைப்பார் என்று சாரங்கி தெரிவித்தார்.

வரும் மக்களவைத் தேர்தலில் அனைத்து 543 தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் என்றார்.

பதிவுபெற்ற, மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் 40 குறிப்பிட்ட உயர்நிலைத் தலைவர்களின் பயணச் செலவு வேட்பாளர்களின் தேர்தல் செலவில் சேர்க்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

**இந்தியச் செய்திகள்**

## தமிழ்நாட்டில் ஒரே நாளில்வாக்குப் பதிவு தேர்தல் ஆணையம் ஆராய்கிறது

(சென்னை)


வரும் மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஒரேநாளில் வாக்குப் பதிவு நடத்தப்படுமா என்பது குறித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்த பிறகே தீர்மானிக்கப்படும் என்று தேர்தல் ஆணையர் சங்கர் கூறியிருக்கிறார்.

தமிழ் நாடு மற்றும் புதுவையில தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய நான்கு நாள் பயணமாக தேர்தல் ஆலோசகர் ஜே.பி.ராவ்வுடன் சென்னை வந்த அவர் விமான நிலையத் தில் செய்தியாளர்களுடன் பேசினார்.

மக்களவைத் தேர்தலுக்கான திகதி விரைவில் முடிவுசெய்யப் படுமென்று கூறிய அவர் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணி பல்வேறு மாநிலங்களிலும் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்.

பின்னர் தேர்தல் ஆணையர் குழு புதுவை சென்றது.அங்கு கவர்னர் மாளிகையில் புதுவை மாநில தலைமைச் செயலர் பத்மநாபன், தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து அந்தக் குழு ஆலோசனை நடத்தியது.

பின்னர் சங்கரும், ராவும் அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள். (து)



அமைப்புசாரா தொழிலாளர்க[illegible] பாதுகாப்புத் திட்டத்தை உத்தரப்பிரதேசத் தலைநகர் லக்னோவில் பிரதமர் வாஜ்பாய் தொடக்கி வைத்தார். கடந்த தேர்தலில் இத்தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட வாஜ்பாய், வரும் மக்களவைத் தேர்தலிலும் லக்னோ விலேயே போட்டியிடப் போவதாக தமது விருப்பத்தைத் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பெண் தொழிலாளர் ஒருவருக்கு காப்பீட்டுச் சான் றிதழை வழங்கும் பிரதமர்.

## ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி மையத்தில் பயங்கர வெடி விபத்தில் 6 பேர் பலி

(சென்னை)

ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி மையத்தில் நேற்று முன்தினம் சோதனை மோட்டார் வெடித்ததில் குறைந்தது 6 பேர் உயிரிழந்தனர். மிக மோசமாகக் காயமடைந்த இருவர் சென்னை மருந்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு றொக்கட் உந்து களத்தில் இந்த விபத்து ஏற்பட்டது. எளிதில் தீப்பற்றும் எரிபொருளைப் பயன்படுத்தி ஆய்வு நடத்திய போது சோதனை மோட்டார் வெடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதி முழுவதுமே எரிந்து போனதாகச் செய்தி யொன்று தெரிவிக்கிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து, அந்தப் பகுதியில் உஷார் நிலை அறிவிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீஹரி கோட்டா மைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே விபத்து நடந்த இடத்தைப் பார்வையிடுவதற்காக இஸ்ஸோ தலைவர் மாதவன் நாயர் ஸ்ரீஹரி கோட்டா விரைந்தார்.

இந்த விபத்துக் குறித்து உயர் நிலைவிசாரணைக்கு இஸ்ஸோ உதரவிட்டுள்ளது. (து)



இந்த ஆண்டின் இரண்டாவது சுட்டட் போலியோ சொட்டு மருந்து முகாம் நாடு முழுவதும் நேற்றுமுன் தினம் நடத் தப்பட்டது. தமது சொந்தத் தொகுதியான லக்னோவில் ஒரு குழந்தைக்கு சொட்டு மருந்து வழங்கி முகாமை தொட க்கி வைத்தார் பிரதமர் வாஜ்பாய்.

## தேர்தல் பிரசாரத்துக்கு விமானப் பாவனை அத்வானிக்குக் கிடையாது

(புதுடில்லி)

துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தேர்தல் பிரசாரத்தின் போது விமானப்படை விமானத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்ற அரசின் கோரிக்கையைத் தேர்தல் ஆணையம் நிராகரித்து விட்டது.

இதுபற்றி டெல்லியில் செய்தியாளர்களுடன் பேசிய தேர்தல் ஆணைய செய்தித் தொடர்பாளர் கே.என்.ஷா தற்போது பிரதமர் மட்டுமே பிரசாரத்தின்போது விமானப் படை விமானத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார். இது பிரதமரின் பாதுகாப்பைக் கருதிய நடவடிக்கை, இதுதொடரும் என்றார்.

## தே.ஜ.கூ.இல் இருந்து தி.மு.க. விலகியது ஏன்? இல கணேசன் கேள்வி

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறியதற்கான காரணத்தை தெளிவாகத் தெரிவிக்கவேண்டுமென்று பா.ஜ.கவின் அகில இந்தியச் செயலாளர் இல கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தி.மு.க. அமைச்சர்கள் இராஜினாமா செய்தது குறித்துப் பல்வேறு நேரங்களில் பல காரணங்களைக் கூறுவதாகக் குற்றஞ்சாட்டினார்.


அயோத்திப் பிரச்சினை காரணமாகவே அமைச்சரவையிலிருந்து தி.மு.க. வெளியேறியிருப்பதாகக் கூறியிருப்பது மக்களை ஏமாற்ற முயற்சிப்பதாகும் என்றார்.

தி.மு.க. அமைச்சர்கள் இராஜினாமா செய்தபோது இந்தக் கருத்தை அவர்கள் தெரிவிக்கவில்லை என்று இல கணேசன் கூறினார்.

மாநில சுயாட்சி பற்றிய தி.மு.க. தீர்மானம் குறித்துக் குறிப்பிட்ட இல கணேசன் தமிழ்நாட்டில் மாநில அரசின் பல வளர்ச்சித் திட்டங்களுக்கு தி.மு.க. அமைச்சர்கள் தான் முட்டுக்கட்டையாக இருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டினார். (து)

# யாழ். செயலகத்தில் நேற்று...





வேட்பு மனுத் தாக்கல் செய்யவந்த ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர்அணி) உறுப்பினர்கள்.







வேட்புமனுத்தாக்கல் செய்யவந்த ஸ்ரீ.மு.கா.யாழ்.முதன்மை வேட்பாளர் எஸ்.சுபியான், சுயேட்சையாகப் போட்டியிடவுள்ள எம்.எம்.ராபிக்.



ஆனந்தசங்கரி - பிரேமச்சந்திரன்,



ரவிராஜ் - குகேந்திரன் அளவளாவும் காட்சி



வேட்பாளர் பட்டியலைப் பார்வையிடும் மக்கள்,



படங்கள்
க.பவன்

யாழ். வந்துள்ள சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள்.

# சீனாவில் நிலக்கரிச் சுரங்க வெடிவிபத்தில் 37 பேர் பலி

(பெய்ஜிங்)

சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 37 சுரங்கத் தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் சிக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்திருக் கலாமென அஞ்சப்படுகின்றது.

சீனாவின் வடகிழக்கு மாகாணத் தில் கெலோஞ்சியாங் பகுதியில் உள்ள சுரங்கம் ஒன்றில் வாயுக் குழாய் வெடித்ததில் இந்த விபத்து இடம்பெற்றது.

மீட்புப் படையினர் மீட்பு பணி களை மேற்கொண்டபோதிலும் சிக்கியுள்ள ஊழியர்கள் எவரை யும் இதுவரை காப்பாற்ற முடிய வில்லை என்று தெரிவிக்கப்படுகின் றது.

உலகில் நிலக்கரி உற்பத்தி யில் சாதனை படைத்துள்ள சீனா வில் அடிக்கடி ஏற்படும் சுரங்க விபத்துக்களால் வருடம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான உயிரிழப்புக் கள் ஏற்படுவதாகப் புள்ளி விபரங் கள் தெரிவிக்கின்றன. (து-9)




ஜம்மு–காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தின் மாண்டி என்ற இடத்தில் ஊடுருவ முயன்ற 7 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாண்டியில் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்கள்.

## மொரோக்கோவில் பூமியதிர்ச்சியில் 20 பேர் பலி

(ராபர்ட்)

மொரோக்கோவின் வடபகுதி யில் நேற்று அதிகாலை ஏற்பட்ட கடும நிலநடுக்கத்தில் 20பேர் உயி ரிழந்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது.

ரிச்டர் அளவுகோலில் 6.3 என பதிவாகியிருந்த இந்த நிலநடுக் கத்தால் ஏற்பட்ட சேத விபரங் கள் குறித்து உடனடியாகத் தக வல எதுவும் கிடைக்கவில்லை. (து-9)



சிங்கப்பூரில் திங்கட்கிழமை நடைபெற்ற ஆசிய ஏரோஸ்பேஸ் 2004' விமான சாகச நிகழ்ச்சியில் பங்கேற்ற இந்தியாவின் கிரண் எம்கே 2 ரக விமானங்கள். ஒரு வாரமாக நடைபெறும் இக்கண்காட்சி மிகப் பெரிய வர்த்தக கண்காட்சியாகவும் கருதப்படுகிறது.

# அரசும் தீவிரவாத இயக்கமும் மியான்மாரில் கூடிப்பேச்சு

மியான்மாரில் உள்ள தீவிர வாத இயக்கம் அந்த நாட்டு அர சாங்கத்துடனான இரண்டாம் சுற்றுச சமாதானப் பேச்சுக்களை நேற்று ஆரம்பித்துள்ளது.

யான்கூனில் கடந்தமாதம் நடை பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முதல் சுற்றுப் பேச்சு வார்த்தையின் தொடராக நேற்று 2ஆம் சுற்று ஆரம்பமாகியது.

நேற்றைய பேச்சுவார்த்தை இப் போது ஆரம்பித்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மேலும் முன் னெடுத்துச் செல்லவும் மியான் மாரில் சமாதானத்தை நிலைநாட் டவும் வழிவகுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

பிரிக்கேடியர் ஜெனரல் ஹியவ் தீன் தலைமையில் அரசாங்கத் தரப்பும் ஹிரீன்தேசிய ஒன்றியத் தின் இணைச் செயலாளர் நாயகம் ஷோடுவே தலைமையில் தீவிரவா திகள் குழுவும் பேச்சுவார்த்தை யில் பங்குபற்றுகின்றன. (து-9)

## 900கிலோ எடையுள்ள பன்றி சீனாவில் கின்னஸ் சாதனை

சீனாவில் ஐந்தே வருடத்தில் 900கிலோ எடை அளவுக்கு ஒரு பன்றியை வளர்த்துச் சாதனை புரிந் துள்ளார் ஸீசாங்ஜின் என்ற விவசாயி.

இச்சாதனைக்காக கின்னஸ் உலக சாதனைட் புத்தகத்தில் இடம்பெறவுள ளது இப் பன்றி.

வடகிழக்குச் சீனாவின் லியா வோங் மாகாணத்தில் இந்த விவசாயி 5ஆண்டுகளாக ஒரு பன்றியை வளர்த்து வந்தார்.அதன் நீளம்8 அடிக்குமேல். வயிற்றுப் பகுதியல் சுற்றளவு 7அடிக்குமேல். அப்பன்றி இந்த மாதம் 5ஆம் திகதி இறந்து விட்டது. இறக்கும் போது அதன் எடை 900 கிலோ.

இதற்குமுன் ஷரங்சாயா நகரின் புறப்பகுதியில் ஒரு விவசாயி 700 கிலோ எடை அளவுக்கு ஒருபன்றியை வளர்த்திருந்தார்.


அதுவே இதுவரை கின்னஸ் சாத னையாக இருந்தது.அதை ஸீசாங் ஜின் முறியடித்து விட்டார்.(து)

## ஈராக் தற்கொலைத் தாக்குதல் 13 பேர்பலி

(பக்தாத்)

ஈராக்கில் கிஹிக் நகரில் நேற்று முன்தினம் தற்கொலைப்படை வீரர் ஒருவர் காவல் நிலையத்தின் மீது காரைமோதி தாக்கியதில் 13பேர் உயிரிழந்தனர்.51பேர் காய மடைந்தனர்.

நகரின் பாதுகாப்புப் பற்றி மதிப் பீடு செய்ய அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் டொனாள்ட் ரம்ஸ்பீல்ட் முன்னறிவிப்பு இல்லாமலே பக்தாத் போய்ச்சேருவதற்கு முன்பு இந்தத் தாக்குதல் நடைபெற்றது. (து-9)



டோக்கியோ அரண்மனையில் கடந்த திங்கட்கிழமை தனது 44ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார் ஜப்பான் இளவரசர் நருஹிடோ. உடன் இளவரசி மசோகா, மகள் ஐகோ.

## அல்ஜீரியப் பிரஜைகள் இருவர் ஸ்பெயினியப் பொலிஸாரால் கைது

(மட்ரிட்)

ஒஸாமா பின்லேடனின் அல் கெய்டா இயக்கத்திற்கு உதவி னார்கள் என்ற சந்தேகத்தின் பெய ரில் அல்ஜீரியப் பிரஜைகள் இரு வரை ஸ்பெயின் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விருவரும் அல்கெய்டா இயக்க உறுப்பினர்களுக்கு சட்ட விரோதமாக கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை களில் ஈடுபட்டு வந்ததாக ஸ்பெயின் பொலிஸார் கூறியுள்ளனர்.

ஸ்பெயின் உயர்நீதிமன்ற உத் தரவுக்கு அமையவே இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டதாகப் பொலி ஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அல்கெய்டா இயக்க உறுப்பி னர்களுக்கு நிதி உதவி செய்தார் கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் மூவருக்கு எதிராக கடந்த மாதம் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

அமெரிக்கா மீது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக் குதலைத் தொடர்ந்து அல்கெய்டா உறுப்பினர்கள் பலர்பெயினில் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-2)

WORLD NEWS உலக தரிசனம்



ஹைதி நாட்டின் போர்ட் ஆர் பிரின்ஸ் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருவிழாவில் கழுத்தில் பாம்பைச் சுற்றிக் கொண்டு வந்த பாம்பாட்டி.

# நீதி நியாயமான தேர்தல் நடைபெற சுதந்திர ஆணைக்குழு தேவை

## –கோபிஅனான்–

(நியூயோர்க்)

இவ்வருடத்திற்கு முன்னர் நீதி யும் நியாயமுமான தேர்தல் ஒன்று நடத்தப்படவேண்டுமானால், ஈராக் கில் உடனடியாக சுதந்திர ஆணைக் குழுவொன்று உருவாக்கப்படவேண் டும் என ஐக்கியநாடுகளின் செய லாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஈராக்கில் தேர் தல்களை நடத்தும் பொருட்டு சட்ட பூர்வ ஆணைக்குழுவொன்னை நிய மிப்பது அடுத்தவருடம்வரை சாததியப்படக்கூடிய ஒன்றல்ல என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை கூறியுள்ளது.

ஈராக்கில் சுதந்திர ஆணைக்குழு ஒன்றையும், அரசியல் சட்டத்தை யும் உடனடியாக ஏற்படுத்தினால் இவ்வருட இறுதிக்குள் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் என பாதுகாப்புப் பேரவை வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா தலைமையிலான படையினர் யூன் மாத முடிவில் அங்கிருந்து வெளி யேறிய பின்னர் ஈராக்கில் காபந்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதற் கான எந்தவொரு சிபாரிசையும் கோபி அனானும் அவரது ஆலோ சகர்லக்டர் பிராமியும் முன்வைக் கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின றது. (து-9)



# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

56

## இரண்டாம் பகுதி

### 2 . புத்தள மாவட்டத்துச் சமுதாய நிலைகள்

(ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்து அதிகாரியின் அறிக்கை ஒன்றில் உள்ள பகுதி)

**செட்டிகள்**

புத்தளத்தில் வாழுகின்ற செட்டிகள் எல்லோரும் இந்துக்களாவர். அதிகமான தற்பெருமையும், ஆழமான அஞ்ஞானமும், அர்த்தமற்ற மூடநம்பிக்கைகளும் அவர்களிடையே மிகுந்துகாணப்படுகின்றன. அவர்களின் இப்பண்புகள் விஞ்ஞானத்திற்கும் நியாயத்திற்கும் முரண்பாடானவை. வறுமையாலும் தற்பெருமையாலும் அவர்கள் ஐரோப்பவில் உள்ள ஸ்பானியர்களுக்கு ஒப்பானவர்கள். அவர்கள் சோம்பலுடையவர்கள்; குள்ளமானவர்கள்; ஏமாற்றும் தன்மை கொண்டவர்கள். ஆயினும் சாதுரியமாக வியாபாரம் செய்யவல்லவர்கள். வியாபாரமே அவர்களின் பிரதானமான தொழிலாகும். பொதுவாக மற்றைய எல்லாச் சமூகத்தவரைக் காட்டிலும் பிரயோசனமுடையவர்கள் என்பதால் அவர்களை வெவ்வேறான தொழில்களில் ஈடுபடுத்த முடியும் ஆனாலும் அவர்கள் மீது நம்பிகசை வைக்கலாகாது.

**கலியாணம்**

ஒருவனுடைய பிள்ளைகளை அவனுடைய சகோதரியின் பிள்ளைகளுக்குக் கலியாணம் முடித்து வைக்கலாம். மைத்துனரானவர்களை அவர்கள் விரும்பாதவிடத்தும், கலியாணம் பண்ணி வைக்கலாம். மாப்பிள்ளையும் பெண்ணும் பிடிவாதமாய் இருந்து மறுப்பார்களேயானாற் பெற்றோரிடமிருந்து கிடைக்கவேண்டிய சீதனத்தை அவர்கள் இழக்க நேரிடும். கலியாணம் முடிக்கச் சம்மதமான மாப்பிள்ளைக்கோ பெண்ணுக்கோ அந்தச் சீதனம் உரிமையாகும். அதன் பிரகாரம் சீதனத்தை இழந்தவர் தான் விரும்பிய ஒருவரைக் கலியாணம் பண்ணிக் கொள்ளலாம்.

உறவினரிடையே கலியாணம் செய்யக்கூடிய ஆணோ பெண்ணோ இல்லாத விடத்துத் தூரத்தில் உள்ளவர்களோடு சம்பந்தம் செய்து கொள்ளலாம். தனது மைத்துனியைக் கலியாணம் பண்ணிய ஒருவன், அவளின் சம்மதத்தோடு வேறொருத்தியைத் தனது இரண்டாவது மனைவியாகக் கலியாணம் பண்ணிக்கொள்ளலாம். ஆனால் , அவன் இருவரையும் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டிருப்பான். ஒருவனுடைய மனைவி நோய்வாய்ப்பட்டிருந்து வீட்டுக் கருமங்களைச் செய்ய முடியாதவிடத்து அவன் இன்னொருத்தியைத் தனது இரண்டாவது மனைவியாகக் கலியாணம் பண்ணிக்கொள்ளலாம். ஒருவன் தனது மனைவி ஒழுக்கக் கேடானவ்ள் என்று கண்டு, அதனை நிருபிப்பானேயாகில் அவன் விவாகரத்துப் பெறலாம். அதன் பின் அவன் மறு கலியாணம் செய்து கொள்ளலாம்.

மனைவியான ஒருத்தி கள்ளப்புருஷனோடு கூடுமிடத்துக் கண்டுபிடிக்கப்பட்டால் அவளின் தலைமயிரை அரிந்து மொட்டையடிப்பது வழமை. அவள் சாதியில் இருந்து விலக்கப்படுவாள். கலியாணத்திற்கு முன்பு வைத்திருந்த சொத்துகள் எல்லாவற்றிலும் அவள் உரிமை இழந்து விடுவாள்.

**பாகப்பிரிவினை**

மனைவி இருக்கப் புருஷன் பிள்ளைகள் இல்லாது இறந்தானேயாகில் அவனுடைய சொத்துகள் எல்லாம் அவனுடைய ஆண்சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் உரிமையாகும். அவனுக்குச் சொத்துகள் ஏதேனும் இல்லாதவிடத்தும் அந்த விதவையை ஆதரிப்பதற்கு அவர்கள் கடமைப்பட்டிருப்பார்கள் அவளை ஆதரிக்க அவர்களுக்கு வசதியில்லாது போனாலும், அவர்களின் உதவியைப் பெறுவதற்கு அவளுக்கு விருப்பமில்லாத விடத்தும், மற்றும் உறவினர்கள் அவளை ஆதரிக்க வேண்டும். தாலித்தியம் என்னும் ஒரு தொகைப்பணத்தைப் பற்றுச்சீட்டு எழுதிக்கொண்டு அவளுக்குக் கொடுப்பார்கள். அவள் அதை எடுத்துக்கொண்டு, தான் விரும்பிய படி,தனது உறவினரோடு போய் வாழ்ந்து கொள்ளலாம். அதன் பின்பு அவள் ஏதேனும் சொத்துகளை சம்பாதித்தால், அவளுடைய அந்தத் தேட்டத்தில் அவளுடைய இறந்துபோன கணவனின் உறவினருக்கு எதுவித உரிமையும் கிடையாது.

மனைவியானவள் பிள்ளைகள் இல்லாது மரணமானாள் அவளுடைய சீதனத்தின் மீது கணவன் உரிமை பெறுவதில்லை. அது அவளுடைய உறவினருக்குரியதாகும். மகன் ஒருவன் இருக்க அவள் இறந்திருப்பாளேயானால் அவளுடைய சீதனம் எல்லாம் அவனுக்கு உரியதாகும்.

**ஆண்மக்களின் உரிமையுங் கடமையும்**

மகன் ஒருவனும் மகள் ஒருத்தியும் இருக்கத் தாயுந் தகப்பனும் இறந்துபோனால், எல்லாச் சொத்துக்களும் மகனுடைய உரிமையாகும். மகளுக்கு அவற்றில் உரிமையில்லை. ஆயினும் அவளை ஆதரிப்பதற்கும் ,அவளுடைய சீவனத்திற்கு வேண்டிய வசதிகளைக்கொடுப்பதற்கும், சீதனம் கொடுத்துக் கலியாணம் பண்ணி வைப்பதற்கும் அவன் கடமைப்பட்டிருப்பான். பெற்றோரின் சொத்துகள் இல்லாதவிடத்தும், தமக்கு வசதியில்லாத விடத்தும், ஆண் சகோதரர்கள், கடன்பட்டேனும் தங்கள் சகோதரிக்களுக்கான கடமைகளை நிறைவேற்றவேண்டும்.

பெண்பிள்ளைகளை மட்டும் உடையோரான பெற்றோர் இருவரும், ஆண் சகோதரராகுதல், சகோதரிகளின் ஆண்பிள்ளைகள் ஆகுதல் மற்றும் அத்தகையோரின் ஆண் மக்களாகுதல் இருக்குமிடத்து, மரணமாகிப்போனால், அவர்களின் சொத்துகளுக்குப் பெண்பிள்ளைகள் உரிமை பெறுவதில்லை. உரிமையானது அந்த உறவு முறையினரையே சேரும். அத்தகைய உறவினர்கள் இல்லாதவிடத்துப் பெண்பிள்ளைகள் எல்லா உரிமையும் பெறுவார். பெண் ஒருத்தி உறவில்லாத ஒருவனைக் கலியாணம் பண்ணுவாளேயானால் அவளுக்குச் சொத்துரிமை இல்லையென்பது புராதன வழமை என்பதால் இந்த முறை பின்னபற்றப்படும்.

**வெள்ளாளர்**

இவர்களுட் பெரும்பாலானோர் கிறிஸ்தவராவர்; சிலர் இந்துக்கள் ஆவார். அவர்கள் பாரம்பரியமான இராணுவ சேவை (Lascoreens) புரிகின்றனர். விவாசாயமே அவர்களின் பிரதான தொழிலாகும். அவர்களுடைய குணங்களும் பழக்கங்களும் செட்டிகளிடையே காணப்படுவனவற்றைக் காட்டிலுஞ் சிறந்தனவாகும். ஆயினும் அவர்களின் வழமைகள் செட்டிகளின் வழமைகளைப் பெரிதும் ஒத்துள்ளன.

**வாகையர்**

இவர்களுட் பெரும்பாலானோர் உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவராவர். அவர்கள் பாரம்பரியமான இராணுவ சேவை புரிகின்றனர். விவசாயம், மந்தை வளர்ப்பு, உப்புச் செய்கை ஆகியவற்றில் வாகையர் ஈடுபடுகின்றனர்.

**மீனவர்**

மீனவரில் இஸ்லாமியரும் இந்துக்களும் உள்ளனர். இஸ்லாமிய மீனவரின் பழக்கவழக்கங்களும் வழமைகளும் மற்றைய சோனகரிடையே காணப்படுவனவற்றை ஒத்திருக்கின்றன. இந்துக்களாயுள்ளள மீனவரின் பழக்கவழக்கங்கள் செட்டிகள் மத்தியில் உள்ளனவற்றை போன்றனவாகும். ஆயினும் சில விடயங்கள் குறித்து வேறுபாடுகள் உண்டு. அவர்கள் எல்லோரும் விடா முயற்சியுள்ளவர்கள்.தாங்கள் குடும்பங்களின் முன்னேற்றங் கருதிக் கடினமாக உழைக்கின்றனர். மேலும் அவர்கள் நியாயமான போக்குடையவர்களாகவும் காணப்படுவர். (தொடரும்)

# செய்தித் துளிகள்

## தபால் மூல வாக்களிப்பு 1ஆம்திகதி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தபால் மூலமான வாக்களிப்பு நேற்றுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாசிமக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாண்ம்)

தெல்லிப்பழை துர்காபுரம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் 5ஆம்திகதி வெள்ளிக்கிழமை வரையான 10தினங்கள் மாசிமக இலட்சார்ச்சனை இடம் பெறவுள்ளது.

மறுநாள் மாசிமகப் பெருவிழா இடம்பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## மகளிர் தின போட்டிகள்

(வடலியடைப்பு)

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான அனைத்துலக மகளிர் தினப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (உ-21)

## மாணவர்கள் கௌரவிப்பு

(வடலியடைப்பு)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பயின்று கடந்த ஆண்டில் இடம்பெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த வகையில், மேற்படி ம[illegible]களின் பெயர்,விபரங்களை ச[illegible]ப்பாய் கோட்டக்கல்வி அ[illegible]ம் திரட்டி வருகின்றது. (உ-21)

## திரைக்கலைசார் இலவச பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

திரைக்கதை எழுதுதல், ஒளிப்பதிவு, இயக்கம் ஆகியன தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் மார்ச் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் தினமும் மு.ப.10.00 மணிக்கு கொடிகாமம் வீதி,கரவெட்டி என்ற விலாசத்தில் உள்ள மாவட்ட திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான சலனசித்திரம் அமைப்பின் யாழ்.மாவட்டக்கிளைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இளைஞ், யுவதிகளுக்கு நிரந் தரசுய தொழில் வாய்ப்பினை உருவாக்கிக்கொடுக்கும் வகையில் சலனசித்திரம் அமைப்பினால் நடாத்தப்படும் இத் திரைக்கலை சார் இலவச பயிற்சி நெறிக்கு, தத்தமது பகுதி சனசமூக நிலையத் தலைவர் அல்லது செயலாளரின சிபார்சுடன் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## செவிப்புலனிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் எதிர்வரும் 28ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சீனியர் ஒழுங்கை கலட்டியில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்விற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. கஜேந்திரகுமார் பிரதமவிருந்தினராகவும், நல்லூர் உதவிப்பிரதேச செயலர் எஸ். தெய்வேந்திரம், வணிகர் கழகத்தலைவர் இ. ஜெயராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-51)

## இலங்கைச் சிறுமியால் நியூசிலாந்து அமைச்சர் இராஜிநாமா

(நியூசிலாந்து)

அகதி அந்தஸ்துக் கோரி நியூசிலாந்தில் குடியேறிய இலங்கைச் சிறுமியை, அங்கிருந்து வெளியேற்றிய சம்பவத்துடன் தொடர்புடைய நியூசிலாந்து அமைச்சரவையின் முக்கிய அமைச்சர் ஒருவர் தனது பதவியை இராஜிநாமச் செய்துள்ளார்.

இலங்கையில் இருந்து வெளியேறித் தனது பாட்டியாருடன் நியூசிலாந்தில் அரசியல் தஞ்சம் கோரிய சிறுமியும், அவரது பாட்டியும் கடந்த 13ஆம் திகதி அந்நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

சிறுமியையும் அவரது பாட்டியாரையும் நியூசிலாந்து நாட்டை விட்டு வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்காகச் சட்டத்தரணி ஒருவர் பிழையான தகவல்களை உள்ளடக்கியதான பிரசாரங்களில் ஈடுபட்டதாகவும் இதனை அடுத்தே இவர்கள் நாட்டை விட்டுவெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த மேற்படி அமைச்சர் இதனை அடுத்தே தனது அமைச்சா பதவியை இராஜிநாமச செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## தபால் பெட்டிகள் புனரமைக்கப்படவில்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சேதமடைந்துள்ள தபால் பெட்டிகளைப் புதுப்பிக்க வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் தபாலகப் பிரிவில் உள்ள கடந்தகால அனர்த்தங்களினால் சேதமடைந்த தபால் பெட்டிகள் பல இன்னமும் புனரமைக்கப்படவில்லை.

இத் தபால் பெட்டிகள் புனரமைக்கப்படாமையால் மக்கள் தபால்களைப் போடுவதற்கு உப தபாலகங்கள் அல்லது தபாலகத்தையே நாடவேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(உ-75)

## கூட்டம்

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்திய அரசாங்க கணக்காய்வு அமைச்சுக்களின் அதிபர்கள் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது.

இந்தியா,பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு, மியான்மார், நேபாளம், இலங்கைஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

எல்லைகளைக்கடந்து அறிவையும், அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வது தான் இக் கூட்டத்தின் பிரதான நோக்கமாகும். (தி-60)

## ஆன்மீக சொற்பொழிவு


(யாழ்ப்பாணம்)

நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 27ஆம்திகதி "குருவருள்" எனும் விடயம் பற்றி சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆசிரியரும் சைவப்புலவருமான கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-18)

## பெற்றோரிடம் சிறுவன் ஒப்படைப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத்தில இணைந்த 18வயதிற்குக் குறைந்த சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம அவரது பெற்றோரிடம் ஒப்படைககப்பட்டார்.

போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுப்பிரதிநிதிகள், யுனிசெப் அதிகாரிகள் முன்னிலையில் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் சிறுவனை பெற்றோரிடம் ஒப்படைத்தனர். புலோலி தெற்கு கம்பாவத்தையைச் சேர்ந்த நடராசா தனேஸ் என்ற சிறுவனே அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவராவார். (ச)



இந்திய கிரிக்கெற் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் வீரேந்திர ஷேவக் திருமணம் செய்யவுள்ள கல்லூரி மாணவி ஆர்த்திசிங்குடன் நிச்சயதார்த்தத்தின் போது.

## தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள்

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன. தமிழீழத் திரைப்பட வெளியீட்டுத்துறைப் பொறுப்பாளர் ராதா தமிழ்த்தேசியக் கொடியை ஏற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார். இவ்வேளை நாடுவர்கள், அணிகளின் தலைவர்கள் ஆகியோர் மாவீரர்களின் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலியும் செலுத்தினர்.

காலையில் நடந்த பெண்கள் கபடிப போட்டியில் வவுனியா அணியினர் யாழ்ப்பாண அணியினரை 35-06என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தனர். ஆண்கள் பிரிவில் மன்னார் அணியினர் திருகோணமலை அணியினரை 28-27 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்துள்ளனர்.

30ஓவர்கொண்ட கிரிக்கெற் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அம்பாறை அணி திருகோணமலை அணியை எதிர்த்து முதலல் துடுப்பெடுத்தாடியது. 30ஓவர் முடிவில் 9விக்கெற் இழப்பிற்கு 150 ஓட்டங்களை இவ் அணி பெற்றது. இதில் அணித்தலைவர் நியாஸ் 3சிக்ஸர்கள், 6பவுண்டறிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் றியாஸ் 32ஓட்டங்களையும் ஸத்கீன் 22ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிறீமஸ் 4 விக்கெற்றுக்களையும், லக்ஷ்மன் 4 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினா பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய திருமலை அணியினர் 30 ஓவர் முடிவில் 9விக்கெற் இழப்பிற்கு 149ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தனர்

இதில் பார்த்தீபன் 38ஓட்டங்களையும் அச்சுதன் 24ஓட்டங்களையும் பெற்றனர். மதன், சிறாஜ ஆகியோர் தலா இரண்டு விக்கெற்றுகளைப் பெற்றனர். (யே-68)


மூன்றாவது ஒருநாள் போட்டி நடைபெறவுள்ள

## ஆர்.பிரமதாஸ ச.தே.அரங்கும் ஒரு நாள் ச.தே.தொடர்களும்

முப்பத்தியெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட அதிபர்கள் ஒரேநேரத்தில் இருக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள ஆர்.பிரமதாஸ விளையாட்டரங்கில் 1986ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதி முதலாவது போட்டி நடைபெற்றது. நியூசிலாந்து இலங்கை அணிகளுக்கிடையில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதனை தொடர்ந்து இதுவரை இம் மைதானத்தில் 60ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இந்த மைதானத்தில் இலங்கை அணி 48ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளதோடு அவற்றில் 33போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளதுடன் 11போட்டிகளில் தோல்வியையும் தழுவியுள்ளது. இதில் 4போட்டிகள் முடிவுகள் இன்றி நிறைவுபெற்றன. இந்திய அணிக்கெதிரான 4விக்கெற் இழப்பிற்கு 302 ஓட்டங்கள் பெற்றமை இலங்கை அணி இம்மைதானத்தில் பெற்ற அதிகூடிய ஓட்டமாகக் கருதப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணி இம் மைதானத்தில் 9 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளதோடு அவற்றில் 3போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. மிகுதி 6போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. சிம்பாப்வே அணிக்கெதிராக 7விக்கெற் இழப்பிற்கு 263 ஓட்டங்களை பெற்றமையே இந்த மைதானத்தில் அவுஸ்திரேலிய அணியின் சிறந்த ஓட்டக் குவிப்பாக விளங்குகின்றது. இதற்கு முன்னா இலங்கை அவுஸ்திரேலிய அணிகள் இந்த மைதானத்தில் 7ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளன. இவற்றில் இலங்கை அணி 5போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளதோடு 2போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. இங்கிலாந்து அணியின் கடந்த சுற்றுபபயணத்தின் போது 2போட்டிகளில் இந்த மைதானத்தில் விளையாடவிருந்த போதிலும் மழை காரணமாக 2போட்டிகளும் கைவிடப்படடன. எவவாறாயினம் அவுஸ்திரேலியாவுடனான மூன்றாவது ஒருநாள் போட்டிக்காக ஆர்.பிரமதாஸ விளையாட்டரங்கு தற்போது தயார்நிலையில் உள்ளது. (யே-121)



ஏதென்ஸ்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 14வது உலகடைபிங் சம்பியன் போட்டியில் 10மீற்றர் பிளேட்பார் பிரிவில் தங்கம் வென்ற சீன வீரர் லீயாங் லயான்.

## தன்ராஜ்பிள்ளை இல்லாத இந்திய ஹொக்கி அணியினர்


ஒலிம்பிக் விளையாட்டுவதற்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் இந்திய ஹொக்கி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. திலிப் சஹ்ரே அணியின் கப்டனாக இருப்பார். அனுபவம் வாய்ந்த பிரபல ஆட்டக்காரர் தன்ராஜ் பிள்ளை அணியில் இடம்பெறவில்லை. தன்ராஜ் பிள்ளை முற்றிலும உடல் நிலை தகுதி அடையாத காரணத்தால் அவர் அணியில் சேர்க்கப் படவில்லையென்று இந்திய ஹொக்கி சம்மேளனத்தின் தலைவர் கே.பி.எஸ்கில் நேற்று புது டில்லியில் தெரிவித்தார். (யே-121)

## இந்தியக் கிரிக்கெற் அணிக்கு பிரதமர் வாஜ்பாய் அறிவுரை

எதிரணியை விழ்த்த வேண்டும் என்ற மன உறுதி கடைசிப் போட்டிவரை இருக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இந்திய கிரிக்கெற் வீரர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

விளையாட்டு ஆணையகத்தின் மைதானத்தை உத்திரப் பிரதேச மாநிலம் லக்னோலில் வாஜ்பாய் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். போட்டிகளில் சிறப்பாக விளையாடும் இந்திய அணியினர் இறுதி ஆட்டங்களில் தங்கள் மன உறுதிகளை இழந்து விடுகிறார்கள் என்று கூறினார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்த இநதிய பாகிஸ்தான் கிரிக்கெற் தொடர் பல வழிகளில் உதவும் எனக கூறிய வாஜ்பாய் இதனை வெற்றிதோல்வி எதுவிதத்திலும் பாதிக்காது. இந்திய வீரர்கள் முடிவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் முழுத் திறமையையும் போட்டிகளில் வெளிப்படுத்த வேண்டும் என்றும் வாஜ்பாய் கூறினார். (யே-121)



தற்பொழுது நடைபெற்றுவரும் பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் முந்நிலை வகிக்கும் ஆஷனல் அணித்தலைவர் பற்றிக் வியேரா






மும்பையில் நடைபெற்ற கார் பந்தயத்தில் பங்கேற்ற தனது மகனுடன் வந்திருந்த இந்திய நட்சத்திர கிரிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கர்.

## இலங்கை கிரிக்கெற் அணியில் மாற்றமில்லை

அவுஸ்திரேலியாவுக் கெதிராக நடைபெறவுள்ள அடுத்த இரண்டு ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான இலங்கை கிரிக்கெற் தெரிவுக் குழுவில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை. முதலிரு போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த குழுவே மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு அணிகளுக்குமிடையில் தம்புள்ளையில் நடைபெற்ற முதல் இரண்டு போடடிகளில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைச் ஈட்டியுள்ள நிலையில் மூன்றாவது போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் நாளை நடைபெறவுள்ளது.

இதேவேளை, இலங்கையணியின் துடுப்பாட்டத்தை பலப்படுத்தும் நிலையில் அதிரடி ஆரம்ப ஆட்டக்காரா சமன் ஜயந்த முதன முறையாக அணியில் இடம்பெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக் குழுவின அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து, மஹேல ஜெயவர்த்தன, சனத் ஜயசூரிய, குமார்சங்ககார, டி. எம். டில்ஷான், ரசல் ஆர்னோல்ட், உப்புள் சந்தன, சமிந்தவாஸ், முத்தையா முரளிதரன், குமாா தா்ம சேன, றொமேஸ் களுவித்தாரண, துவன குலசேகர, லொக்கு ஆராய்ச்சி, நுவான் சொய்ஷா, சமன் ஜயந்த ஆகியோர் இடம்பெறுகின்றனர். (யே-121)

## மெய்வன்மைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப.2.00மணிக்கு நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா கலந்துகொள்ளவுள்ளார். (யே)

* * *

(குப்பிளான்)

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை மாலை 2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி ர.விக்னேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக் கல்வி வலய நிதி உதவியாளர் பொன். தர்மேந்திரன் கலந்துகொள்வார். (யே)

* * *

யாழ்.நவாலி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பி.ப.2.00மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபால சிங்கம் கலநது சிறப்பிப்பார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் மு.லோக நாதனும் கௌரவ விருந்தினர்களாக சிலோசனா புலமைப்பரிசில் நிதியத்தின் திருமதி சந்திரசேகரம் தம்பதியினர் கலந்துகொள்ளவுள்ளனர். (யே)

* * *

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இலல மெய்வன்மைப்போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப.2.00மணியளவில் பாடசாலை அதிபர் ம.நவநீதமணி தலைமையில நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக கல்விப் பணிப்பாளர் ஆர்.இராசேந்திரமும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்விக் கழக பொறுப்பாளர் சி.தயாகனும் மருதங்கேணி கோட்டைக் கல்வி அதிகாரி பா.இரகுநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

* * *

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப.2.00மணியளவில் மகாவித்தியாலய அதிபர் எஸ்.அரியகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.தாயகனும் சிறப்புவிருந்தினராக உதவி அரசாங்க அதிபர் ப.வேலாயுதபிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளார். (யே-35)

## சிம்பாப்வே –பங்களாதேஷ் முதல் டெஸ்டின் முடிவு

(ஹராவே)

ஹராரேயில் நடைபெற்ற சிம்பாப்வேக்கும் பங்களாதேஷுக்குமிடையிலான முதல டெஸ்ட்போட்டியில் சிம்பாப்வே அணி 183ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ஸ்கோர்விபரம் வருமாறு: சிம்பாப்வே முதல் இன்னிங்ஸில் 441, இரண்டாம் இன்னிங்ஸில் 8விக்கெற் இழப்பிற்கு 242ஓட்டங்கள் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 353ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கி 163ஓட்டங்களுக்குச் சகல விக்கெற்றுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது. (யே)



நியூஸிலாந்தில் நடைபெறும் கிரிக்கெற் போட்டிகளில் தென் ஆபிரிக்க அணியில் மாற்றீடாக விளையாடும் றடொல்பைப் படத்தில் காண்கிறீர்கள்.

## இன்று ஒரு தகவல்

# இடம் எதுவானாலும்...

ஒரு அலுவலகத்தில் இருவர் பேசிக் கொண்டிருந்தனர். "என்ன இது? நேற்றுவரை இவர் நம்முடன் சகஜமாகப் பேசிப் பழகிக்கொண்டிருந்தார். இன்று நம்மைப் பார்த்து விடடுப் பார்க்காதது போல் போகின்றாரே!" என்றார் ஒருவர். "ஒன்றுமில்லை அவருக்குப் பதவி உயர்வு வந்துவிட்டது. அதனால் நம்முடன் நின்றுபேசுவது கௌரவக்குறைவு என்று நினைக்கிறார் அதுதான் அப்படிப் போகின்றார்" என்றார் இன்னொருவர்.

சராசரி மனிதன் இதுபோன்ற சபலங்களுக்கு ஆளாவது சகஜம்! ஆனால் சில் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு ஆளாவதில்லை அதுமிகவும் அபூர்வம். இஸ்ரேல் தேசத்துக்கதை ஒன்று உண்டு.

ஒருகாலத்தில் அந்த நாட்டில் அரசனைத் தேர்ந்தெடுப்பது தெய்வத்தின் செயலாக இருந்ததாம். ஒரு விசித்திரப் பறவை அங்கு உண்டாம். அதற்கு சந்தோஷப் பறவை என்று பெயராம். ஏற்கனவே இருக்கின்ற ராஜா இறந்து போனால் உடனே அந்தப் பறவை வான வெளியிலிருந்து பறந்து வருமாம். அப்படி அதுபறந்து வந்து யார் தலையில் முதலில் உட்காருமோ அவர் தான் அந்த நாட்டுக்கு ராஜாவாம்! இது எங்கே வழக்கம்.

ஒரு சமயம் ராஜா செத்துப் போனார். எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தனர். சந்தோஷப் பறவை பறந்து வந்தது. யார் தலையில் அது உட்காரப் போகின்றதோ என எல்லோரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தப் பறவை நேராகப் பறந்து வந்து அங்கே நின்று கொண்டிருந்த ஒரு அடிமையின் தலையில் உட்கார்ந்துவிட்டது.

அந்த அடிமை எந்தக் கோலத்தில் இருந்தான் தெரியுமா? தோளிலே மத்தளம், இடுப்பில் ஆட்டுத்தோல், தலையில் இறகுகள் வைத்த தொப்பி வீடுகளில் ஏதாவது விஷேசம் என்றால் ஆடிப்பாடுபவன அவன். யாராக இருந்தால் என்ன? சந்தோஷப் பறவை உட்கார்ந்தால் உட்கார்ந்ததுதானே! அந்த அடிமையை உடனே அந்த நாட்டு மக்கள் ராஜாவாக ஏற்றுக் கொணடனர். அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் அரியணையில் உட்காரவைத்தனர்.

அந்த அடிமை ராஜா என்ன செய்தான் தெரியுமா? அரண்மனைக்குப் பக்கத்திலேயே ஒரு குடிசை கட்டச் சொன்னான். அந்தக் குடிசையினுள்ளே தன்னிடம் இருநத மத்தளம், ஆட்டுத் தோல், உடைந்ததொப்பி எல்லாவற்றையும் பத்திரமாக வைத்தான். அதற்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய நிலைக் கண்ணாடியையும் வைத்தான்.

இவன் இப்படிச் செய்வதைப் பார்த்ததும் அங்கு இருந்த அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். இருந்தாலும் ஒருயோசனை செய்தார்கள் .

ஒரு தேசத்து ராஜாவாக இருப்பவர் இப்படியெல்லாம் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ராஜாவிடம் சென்று மெதுவாகக் கூறினார்கள.

"அரசே நீங்கள் தனியாக இருக்கும் போது கூட உங்களது ராஜ கௌரவத்தை நன்றாகக்காத்துக் கொள்ள வேண் டும்" என ஆலோசனை கூறினர்.

அதற்கு அரசன் கூறினான் "அரசனாவதற்கு முன்பு நான் ஓர் அடிமையாக இருந்தேன்! இப்போதும் அடிக்கடி அதை நினைவுபடுத்துகின்றேன். அப்போதுதான் உங்களையும் மற்றவர்களையும் விட நான் உயர்ந்தவன் அல்ல என்பது எனக்கு உறைக்கும்! மனதிலும் அகங்காரம் தோன்றாது" என்றானாம் அந்த அரசன். இது இஸ்ரேல் தேசத்துக் கதை. அதனால் நமது நாற்காலிகள் மாறலாம் அதற்காக நமது பண்பு மாறக் கூடாது. மனிதர்களுக்கிடையே இருக்கவேண்டிய மரியாதை குறைந்து விடக்கூடாது.

ஒரு அலுவலகத்தில் பெரிய அதிகாரி. அவர்தான் தலைமை அதிகாரி. அவருக்கு கீழே உதவி அதிகாரி. அடுத்து மனேஜர், கிளாக் ,பியூன் அந்த தலைமை அதிகாரி தனக்கு அடுத்துள்ள உதவி அதிகாரியிடம் மட்டும் தான் பேசுவார். அதற்குக் கீழே உள்ளோரிடம் முகம் கொடுத்துப் பேசமாட்டார். யாரும் அவரை நேரடியாக சந்திக்க முடியாது. "எதுவாக இருந்தாலும் உதவி தலைமை அதிகாரியிடம் பேசுங்கள். அவர் தான் என்னிடம் பேசவேண்டும்" என்பார் அப்படி ஒரு சுபாவம்.


அப்படிப்பட்ட அதிகாரி ஒருநாள் அலுவலக வாசலில் காரில் அடிபட்டுக் கிடந்தார். இதைப் பியூன் பார்த்துவிட்டு "ஐயையோ நமது தலைமை அதிகாரி அடிபட்டுவிட்டாரே" என்று தூக்க ஓடிவந்தார். இதைப்பார்த்த அந்த அதிகாரி "நோ" என்று கத்தினார், "நீ வராதே... ஓடிப் போய் என் உதவி அதிகாரியை வரச் சொல்" என்று உத்தரவிட்டார். இது எப்படி இருக்கிறது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ரொனி டி மெல்லின் கட்சித்தாவலால் ஜனாதிபதி சந்திரிகா பேரதிர்ச்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் நிதியமைச்சர் ரொனி டிமெல்,அவரது மனைவியும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மல்லிகா டிமெல் ஆகியோரின் கட்சித் தாவல் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.



ஐக்கிய தேசியக்கட்சிக்கு மாறியுள்ள மேற்படி இருவரினதும் இராஜினாமாக் கடிதங்களை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, தனது நிலைப்பாட்டை விளக்கி அவர்களுக்கு தனித்தனியே கடிதங்களை எழுதியுள்ளார்.

அக்கடிதங்களில், இவர்களது முடிவு தனக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் கடந்த பல சந்திப்புகளில் இது குறித்து எவ்வித கருத்தும் தன்னிடம் தெரிவிக்கப்படவில்லை என்பதுடன் அண்மைய தனியான சந்திப்புகளில் கூட தனது முடிவு குறித்து ரொனி டி மெல் எதுவும் தெரிவிக்காதமை மர்மம் மிகுந்ததாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.



பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே. வி. பியும் அமைத்த கூட்டணியின் பொதுத் தேசியப் பட்டியலில் தனது பெயர் தவிர்க்கப்படும் என்ற வதந்தி குறித்து சென்றவாரம் ரொனி டிமெல் கேட்ட போது, அவருக்கு அத்வதந்தி குறித்து தெளிவு படுத்தியதுடன், இருவருக்கும் தேசியப்பட்டியலில் இடம் தருவதாகவும் வாக்குறுதியளித்திருந்த நிலையில், காரணம் குறிப்பிடாத இந்த இராஜினாமா தனக்கு மிகுந்த அதிர்ச்சி தருகிறதென ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எப்படியாயிருந்தாலும், ஒரு உறுப்பினராக, ரொனி டிமெல் மிகச் சிறந்த பணியாற்றியுள்ளதையும்,மாத்தறை பிரதேசத்தில் ஒரு எம்.பியாக அவர் புரிந்த சிறப்பான சேவைகளையும் ஜனாதிபதி அக்கடிதத்தில் பாராட்டியுள்ளார்.

(உ)

# ஈ.பி.டி.பி — வரதர் அணிக்கூட்டு நேற்று வேட்பு மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி- ஈ.பி.ஆர் எல்.எவ். (வரதர் அணி) ஆகியன தமது வேட்பு மனுவை நேற்று கூட்டாகத் தாக்கல் செய்துள்ளன. எதிர்வரும் பொதுத்தேர்தலில் வீணைச் சின்னத்தில் போட்டியிடவுள்ள இவ்விரு கட்சிகளின் கூட்டமைப்பு நேற்றைய தினம் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

அந்த வகையில் இவ்விரு கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்களினதும் பெயர் விபரம் உள்ளடங்கிய வேட்பு மனுவை ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வே. குகேந்திரன் (ஜெகன்) முற்பகல் 11.15 மணிக்கு யாழ்.மாவட்டத் தெரிவு அத்தாட்சி அலுவலர் செ. பத்மநாதனிடம் கையளித்தார். ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் போட்டியிடவுள்ள இக் கூட்டுக் கட்சியின் வேட்பு மனுத்தாக்கல் நிகழ்வில் இவ்விரு கட்சிகளின் பிரமுகர்களும், ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

வேட்பு மனுவைத்தாக்கல் செய்த பின்னர் எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக வே.குகேந்திரனிடம் பத்திரிகையாளர்கள் கருத்துக்கேட்டபோது,

எதிர்வரும் பொதுத்தேர்தல் மிக முக்கியமான காலகட்டத்தில் இடம்பெறவுள்ளது. இதனால் இதுபற்றி எதுவித எதிர்வு கூறலையும் தற்பொழுது கூறி விட முடியாது. எதிர்காலம் என்பது மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. எனவே மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றார்.

அத்துடன் ,தமதுதேர்தல் கொள்கைகள், எதிர்கால நடவடிக்கைகள் குறித்த தேர்தல் விஞ்ஞாபனம் விரைவில் வெளியிடப்படும் என்றார்.(உ-4)

## இராசிபலன்

**25. 02. 2004**

(மாசி 13, புதன்கிழமை)

| | |
|---|---|
| பஞ்சமி | பிற்பகல் 5.01மணி வரை |
| அச்சுவினி | முன்னிரவு 7.02மணிவரை |
| இராகுகாலம் | 12.30-2.00 மணிவரை |
| சுபநேரம் | 5.00-6.30 மணிவரை |

*திருநீற்றுப் புதன்*

**மேடம்**
நல்லவரவேற்பு, காரிய அனுகூலம்,தொழில் விருத்தி, சிந்தனைமிகுதி.

**இடபம்**
காரிய அலைச்சல், போசன நன்மை, தொழிலில் ஆர்வம், பணவிரயம்.

**மிதுனம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், பெருமையான சம்பவம், பொருள்சேர்க்கை,குடும்ப மகிழ்ச்சி.

**கடகம்**
பிறர் உதவி,மேன்மை,நல்ல முயற்சி, விருந்துபசாரம்.

**சிங்கம்**
தர்மம்,கட்டுப்படுதல், தொழில் நிலை மாற்றம், பிரயாணம்.

**கன்னி**
காரிய தடங்கல், போசன சுகக்குறைவு, பிரயாணக்கஷ்டம், கலகம்.

**துலாம்**
அபூர்வ சந்திப்பு, தொழிலில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், கௌரவம்.

**விருச்சிகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தேக ஆரோக்கியம், போசன சுகம், புதிய சிந்தை.

**தனுசு**
வியாபாரவிருத்தி, தேவையற்ற பிணக்கு, முயற்சி தாமதம், சகோதரர் உதவி.

**மகரம்**
போசன நன்மை, மாதாசுகம், கற்பனை மிகுதி, ரோகபயம்.

**கும்பம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாண நன்மை,தனவரவு, இலட்சுமிகரம்.

**மீனம்**
மாதர் நட்பு, வீதண்டாவாதம்,தொழிலில் மந்த நிலை, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## கூட்டுறவு அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

கிராமிய வங்கிகளின் நிதியை, பிரமுக வங்கியில் வைப்புச் செய்து கூட்டுறவு வங்கிகளின் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

கிராமிய வங்கிகளின் நிதியை பிரமுக வங்கியில் வைப்புச் செய்த கூட்டுறவு வங்கி அதிகாரிகள் 20 பேர் இதுவரை இனங்காணப்பட்டு, அவர்களது பதவியில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் பல தகவல்களை அரசாங்கச்சேவைகள் ஆணைக்குழுவும், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளும் சேகரித்து வருவதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (தி-60)

## ஐ. தே .க. பிரசாரக் கூட்டம் நாளை முதல் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி 100 தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதென தீர்மானித்துள்ளது. இக்கூட்டங்கள் அனைத்திலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

கட்சியின் முதலாவது கூட்டம் நாளை வியாழக்கிழமை கண்டியில் ஆரம்பமாகவுள்ளது. இக் கூட்டத்தை பிரதமர் ஆரம்பித்து வைப்பதுடன், கட்சியின் முக்கிய பிரமுகர்களும், மதத்தலைவர்களும் கலந்துகொண்டு ஆசி வழங்கவுள்ளனர்.

இதற்கிடையில் மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது கூட்டமும் நாளை வியாழக்கிழமை அனுராதபுரத்தில் நடை பெறவுள்ளது. இவ்விரு கட்சிகளும் பௌத்த மத ஆசாரங்களினதும், கொள்கைகளின் அடிப்படையிலுமே தமது பிரசாரங்களை ஆரம்பிக்கவுள்ளன. (தி-60)

## பிக்குகளுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பௌத்த பிக்குகள் போட்டியிடவுள்ளமையை எதிர்த்து கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. பெருமளவு பிக்குகள் பங்கேற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்னவிற்கு எதிராக பல கோசங்கள் எழுப்பப்பட்டன. பௌத்த பிக்குகள் வேட்பாளர்களாக இருப்பதால பௌத்த மக்களுக்கு பிக்குகளுக்கும் இடையில் விரிசல்கள் ஏற்படும் என தேர்தலில் ஈடுபட்ட பௌத்த பிக்குகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(உ -61.10)

# சோமவன்ச சிறிமாவோவை சிறைப்பிடிக்க

# றோஸ்மீட் பிளேசுக்கு ஆயுதங்களோடுவந்தார்!

## விஜேவீரவின் குருநாதர் நினைவு கூருகிறார்

**1971ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜே.வி.பி.யின் புரட்சியில் எதுவி தத்திலும் பங் கெடுத்துக்கொள்ளாத பொழுதிலும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்டு ஜே.வி.பி.தலைவர் றோகண் விஜேவீ ரவின் குருநாதர் என்று கணிக்கப் பட்டு ஒரு வருடத்திற்கும் மேலா கச் சிறைவைக்கப்பட்டிருந்தவரும் இலங்கைக் காம்யூனிஸட் கட்சியின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவருமான திரு.பிரேம்லால் குமரசிறி அவர்கள் "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழில் தனது பழையை ஞாபகங்களை மீட்டிப் பார்க்கிறார். அதனை எமது வாசகர்களுக்காகத் தமிழில் தருகிறோம்.**

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் "றோஸ்மீட் பிளேஸ்" இல்லத்தைத்தாக்கி அவரைச் சிறைப்பிடித்துச செல்ல வந்த இளை



ஞா குழுவில் தற்போதைய ஜே.வி.பி. யின் தலைவரான சோமவன்ச அமரசிங்கவும் இருந்தார்.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. புரட்சியின்போது அதன் தலைவரான றோகண விஜேவீரவின் குருநாதர் நான்தான் என்று என்னை சிறிமாவோவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கைதுசெய்தது. எனது கூண்டுக்குப் பக்கத்துக் கூண்டில் திரு.சோமவன்ச அடைக்கப்பட்டிருநதார். சிறையிலே தினமும் நடக்கும் 1/2 மணி நேர உடற்பயிற்சியின்போது நானும் அவரும் சந்தித்துக்கொள்வதுண்டு. ஆயினும் அரிதாகவே நாம் பேசிக்கொண்டோம். அப்பொழுது அவர் துடிப்பு மிகு இளைஞனாகவிருந்தார். என்று குறிப்பிடும் குமரசிறி.

அரசைக் கவிழ்க்கச் சதிசெய்தது, பிரதம மந்திரியைக் கடதது வதற்குத் திட்டமிட்டது உட்பட்ட குற்றச்சாட்டுக்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 22 பேருக்கு இரண்டுவருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இத் தண்டன்ன பெற்றவர்களில் சோமவன்சவும் அடங்குவார்.

### ஜே.வி.பி.யின் தவறு

எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்ற பாகுபாடு இன்றி ஜே.வி.பி. யினர் செய்த கொலைகள் மிகப் பாரிய வரலாற்றுத்தவறாகும் என்று கூறிய திரு. அமரசிறி தற்கால அரசியலில் ஜே.வி.பி.யின் பிரசன்னம் மிகவும் அவசியமானது ஏனெனில் இக் கட்சியில் உள்ள இளைஞர்கள் மிக நேர்மையானவர்கள், தற்போதைய ஊழல் மிகுந்த அரசாட்சியில் இவர்கள் புதிய சகாப்தங்களை ஏற்படுத்தக்கூடியவர்கள்.

### குருவானது எப்படி

றோகண விஜேவீரவுக்குக் குருவானது எப்படி என்று விளக்கினார். திரு. பிரேம்லால்குமரசிறி குரு சிஷ்ய உறவு எனக்கு றோகணவுக்கும் இடையில் சுமார் 40வருடங்களுக்கு முன்னர் உருவானது. 1964ல் ஹக்மத் தொகுதியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் போட்டியிட்டபோது கொட்டேகொட பகுதியில் சிறிய கடை ஒனறை நடத்திவந்த றோணகவின் தந்தை டொன் அண்டிறிஸ் விஜய வீரவை அப்பகுதித் தேர்தல் முகவராக நான் நியமித்ததோடு, இவ்வளவும் ஆரம்பித்தது. தேர்தலில் நான் வெற்றிபெற்றேன ஆனால் தேர்தல் வன்முறைகளில் றோகணவின் தந்தை மரணமடைந்தார்.

### முதல் சந்திப்பு

மரணமான தனது தந்தையைப் பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு வந்தார் றோகண வீஜய வீர. மிகவும் உடைந்துபோன நிலையில் நான்கு அல்லது ஐந்துவயதுச் சிறுவனாக அவரை நான் முதல் முதலில் பார்த்தேன்.

கம்யூனிஸ்ட கட்சியின துண்களில் ஒருவர் என்று வர்ணிக்கப்படும் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் ஆலோசனையில் கட்சியின் நிதியில் இருந்து மாதாந்த உதவி றோகணவின் குடுமபத்திற்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.



### ரஷ்யப் பயணம்

மீண்டும் அவரை நான் பார்த்தது உயர்கல்வியில் தேறி பல்கலைக்கழகப் படிப்பிற்காக அவரது தாயாருடன் ஒரு இளைஞனாக என்னை சந்திக்க வந்த போது தான்.

அப்பொழுதுதான் ரஷ்யாவின் லுமும்பா பலகலைக்கழகம் வெளிநாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்களின் குடும்பத்தினருடைய பிள்ளைகளுக்கு புலமைப்பரிசிலுடன் கூடிய அனுமதியை வழங்கத் தொடங்கியிருந்தது.

உடனடியாக இரண்டுசோடி சேட்டுக்களையும் முழுக்காற்சட்டைகளையும் தைத்துக்கொண்டு ரஷ்யா புறப்படத் தயாராகும்படி றோகணவின் தாயாருக்குக் கூறினேன். மருத்துவக் கல்வியும் அதற்கான சகல செலவுகளையும் பல்கலைக்கழகமே செய்தது.

### றோகணவிஜயவீர

றோகண விஜயவீர உண்மையிலேயே மிகவும் புத்திக்கூர்மையும் திறமையும் மிக்க ஒரு மாணவன. வருடா வருடம் லுமும்பா பல்கலைக்கழகம் விடுமுறை வழங்கிய போதும் அவர் ரஷ்யாவிலேயே தங்கி மாக்ஸிஸம் படித்து வந்தார்.

இதேவேளை தான் கம்யூனிஸ்ட் கடசி உலகளாவிய ரீதியில் பிளவுபட்டு, சீனச் சார்வு மற்றும் மொஸ்கோ சார்புச் சித்தார்த்தங்களைப் பின்பற்றத் தொடங்கியது.

இலங்கையில் எஸ்.ஏ.விக்கிரமசிங்க மொஸ்கோ சார்பிலும் திரு குமரசிறி சீனச் சார்பான கொள்கைகளுக்கும் தலைமை தாங்கினர். இதேவேளை, ரஷ்யாவில் இருந்து விஜேய வீரவும் அவரது சகமாணவர்களும் தமக்கு ஆதரவு தெரிவித்து கடிதம் அனுப்பியதை நினைவு கூர்ந்த குமரசிறி இதன் காரணமாக விடுமுறைக்கு இலங்கைவந்த விஜேவீர மீண்டும் ரஷ்யா செல்ல முடியாமற் போனதையும் நினைவுகூர்ந்தார். அதுமட்டுமல்லாமல் அவரது மருத்துவப் பட்டப் படிப்பும் முற்றுப் பெறாமலே போய் விட்டது என்றும் கூறினார்.

### விஜேவீரவும் அரசியலும்

சோவியத் தூதரகம் அவருக்கு விசா மறுத்துவிட்டதால் மிகவும் அதிர்ச்சியடைைந்தவராகக் காணப்பட்ட விஜேவீரவை நான் சமாதானப்படுத்தி எனது கட்சியில் இணைத்தேன். அவர் மிகவும் இலடசியமுள்ள ஒரு இளைஞனாக இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டமைப்பைப்பாத்து பின் நாளில் தனது கட்சியை உருவாக்கும் அடிப்படைகளை அவர் உள்வாங்கிகொண்டா. சீனச் சார்பான எனது கட்சியுனுள் மேலும் பல விளைவுகள் அதிரடியாக தொடர்ந்து வந்தமையால றோகண மிகவும் குழப்பமும் வருததமும் காண்பித்தார். பல மணி நேரம் நாங்கள் சம்பாசித்திருக்கிறோம் ஆனால் முடிவுகள் தெரியவில்லை.

### புதிய கட்சி

அவர் ஜே.வி.பியை ஆரம்பித்தார். என்னை அதன் தலைவராக இருக்கும்படி கேட்டார். ஏனெனில் சற்றப் பிரபலமான அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் அவருக்கு அபபொழுது தேவைப்பட்டார். ஆனால் நான் அதனை மறுத்துவிட்டேன்.

### றோகணவுடன் முரண்பாடு

நான் அதை நிராகரித்தமைக்கு அவரது புரட்சியின் அடிப்படையில் எனக்கிருநத முரண்பாடுகளே காரணமாகும்.

அவர் ஒருநாள் புரட்சியில் நம்பிக்கை கொண்டிருந்தார். கிராமங்களில் இருந்து சென்று நகரங்களைத்தாக்க திட்டமிட்டிருந்தார். பொலிஸ் நிலையங்களை முற்று கையிட்டு அழிப்பதால் ஆட்சியை

**தமிழாக்கம்**
**பேதுரு யேசுதாசன்**

கைப்பற்றலாம் என்று திட்டமிட்டார். ஆனால் இவையாவும் தவறு எனறு அவருக்கு எடுத்துக்கூறினேன்.

ரஷ்யாவிலும சீனாவிலும் புரட்சி வெடிததது ஆனால் அவை வெறறி பெறக்காலம் எடுத்ததை அவருக்கு எடுத்தியம்பினேன் நாங்கள் மற்றவர்களை பிரதிபண்ணிப் புரட்சி செய்ய முடியாது. நமக்கு ஏற்ற ஒன்றை நாமே உருவாக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தேன்.

### இறுதிச் சந்திப்பு

விஜேவீர என்னைச் சிறுவயதில் இருந்தே ஒரு தந்தைக்குரிய மரியாதையோடு மதித்து வந்தார். இறுதிவரையும் அவ்வாறே இருந்தார். எந்தச் சந்தர்பபத்திலும் எனது ஆலோசனைகளை மதித்தா். அனால அதன்படி அவர் செயலாற்றவில்லை. பயங்கரத்திற்குரிய அந்த இறுதி நாளின் இறுதிச் சந்திப்பில் அவருக்கு நான் கூறினேன் 'நீ வெற்றியடைந்தால் அதையிட்டு நிச்சயம் நான் பெருமைப்படுவேன்' அது முடியாமல் போனால் எனக்கு வருத்தம் தான் அதுதான் அவரை இறுதியாகப் பார்த்தது. அதன் பின்னர் அவரை நான் பார்க்கவே இல்லை. ஆனால் நாடு அவர் தலைமையில் இரண்டு புரட்சிகளைப் பார்த்தது. இரண்டிலும் அவர் தோற்றுப் போனார்.

அவரின் கட்சியினர் ஜனாதிபதியுடன் இணைந்து போட்டியிடுகின்றனர். ஊழல் மிகுந்த அரசாட்சியில் மாறறம் கொண்டுவரக்கூடிய நேர்மையான இளைஞர்களைக் கொண்டது ஜே.வி.பி. என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் என்றார் குமரசிறி.

# 12தேர்தல்வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

தென்பகுதியின் பிரதான இடங்களில் நேற்றுக் காலை 6மணிவரை 12 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறவுள்ளன.

கம்பஹா, நீர்கொழும்பு, சிலாபம், குருநாகல், பதுளை, களனி கேகலை, மாத்தளை, நுகேகொட ஆகிய பிரதேசங்களில் இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரு பிரதான கட்சிகளும் தலா 3 முறைப்பாடுகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2 முறைப்பாடுகளையும், மக்கள் விடுதலை கட்சி சாராத இருவரும தோதல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி முதல் நேற்றுடன் முடிவடைந்த போட்டி மனுத்தாக்கல் செய்யும் காலப்பகுதியில் 52சிறு சிறு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. (தி-61)

# இந்திய மீனவரின் அடாவடியை கண்டித்து இன்று கூட்டம்

(திருநெல்வேலி)

நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை கடற்பரப்பில் இடம் பெற்ற இந்திய மீனவர்களின் அடாவடிச் செயற்பாடுகளைக் கண்டித்து இன்று மு.ப.10.00மணிக்கு சக்கோட்டை புனித சவேரியா ஆலயத்தில் கணடனக் கூட்டமொன்று இடம்பெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சஙகங்களின் சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி கண்டனக் கூட்டத்திற்காக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமை ஆணைக் குழு, கடற்படையினர் மற்றும் அரசாங்க அதிபரின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-43)

## பிரர்த்தனைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

'இயேசு அழைக்கிறார்' பிரர்த்தனைத் திருவிழா, இன்று புதன் கிழமை முதல் எதிர்வரும் 29ஆம் திகதிவரை தினமும் பி.ப.4.30 மணிகளு மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பிரர்த்தனை வழிபாட்டில் வைத்திய கலாநிதி டி.ஜி.எஸ். தினகரன், வைத்திய கலாநிதி பால் தினகரன், வைத்திய கலாநிதி ஸ்டெல்லா தினகரன் மற்றும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் ஆகியோர் அருளுரை வழங்கவுள்ளனர்.

அத்துடன், நாளை வியாழக் கிழமை முதல் ெதாடர்ந்து மூன்று நாட்களுக்குத் தினமும் காலை 8.3-மணிக்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இப் பிரர்த்தனைத் திருவிழா இடம்பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.(உ-18)

# ஸ்ரீ.சு.க.செயலாளரின் மருதகம் மீது தாக்குதல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவின் செயலாளருக்குச் சொந்தமான மருந்தகம் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் களனியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

எனினும் பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் மேற்கொண்ட தியணைப்பு நடவடிக்கையை அடுத்து தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை களனிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்ற போதிலும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வரும் வேளையில் சுதந்திரக் கட்சிக்கு எதிரானவர்களே இதனைச் செய்திருக்கலாம் என செயற்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (தி-61)

### வேட்பு மனுத்தாக்கல்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை ஐக்கிய தேசியககட்சி நேற்று தாக்கல்செய்தது.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைமை வேட்பாளர் எம்.எச்.முகமட் ரி.மகேஸ்வரன், காமினி லொக்குகே ஆகியோர் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்தனர்.

அதேவேளை, பூமிபுத்திர கட்சியும் பல சுயேட்சைக்குழுக்களும் கொழும்பு மாவட்டததிற்கான வேட்பு மனுககளை நோற்று தாக்கல் செய்தன. (உ-61,10)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். -குறள்

வலம்புரி

## தீய சக்திகளின் திட்டம் ஆழ்கடலில் அரங்கேற்றம்

இலங்கைக் கடலுக்குள் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களைச் சுரண்டிச் செல்லும் இந்திய மீனவர்களின் அட்டகாசம் தாங்க முடியாததாகி விட்டது.

எல்லை கடந்துவரும் இந்திய மீனவர்களின் நடவடிக்கையால் வடபகுதிக் கடற்றொழிலாளர்கள், தமது கடல் வளங்களை மட்டுமன்றி கடற்றொழில் உபகரணங்களையும் இழந்து வருகின்றனர்.

வடபுலத்தில் நடந்த யுத்தத்தினால், கடற்றொழிலுக்குச் செல்ல முடியாமல், கடற்றொழிலாளர்கள் ஜீவனோபாயத்திற்கே பெரும் பாடு பட்டனர்.

கடல் வலயச் சட்டங்கள், சட்டத்திற்குப் புறம்பான பாஸ் நடைமுறைகளால் கடற்றொழிலைச் செய்ய முடியாமல் பெருங் கஷ்டங்களை எதிர்நோக்கிய மீனவர்கள் இப்போது இந்திய மீனவர்களால் துன்புறுகின்றனர்.

இந்தத்துன்பத்தின் படலம் யாராலும் கவனிக்கப்படாத நிலையில், நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக் கடற்பகுதிக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் அங்கு தொழிலில் ஈடுபட்ட இன்பருட்டிப் பகுதி மீனவர்களை வெட்டிக் காயப் படுத்தினர்.

இச் சம்பவத்தின்போது ஒரு மீனவர் காணாமல் போயுள்ளார். அவரின் நிலை என்ன என்பது இதுவரை அறிய முடியாத மர்மமாகவுள்ளது.

இலங்கை, இந்தியக் கடல் எல்லையில் இரு நாட்டுக் கடற்படைகளும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லையைக் கடந்து இலங்கைக் கடற் பரப்பிற்குள் நுழைகின்றனரெனில், இவ்வாறு இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடிக்கச் செல்கின்றனரெனில், இலங்கைக் கடற்படை கடற்பரப்பினுள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையா என்ற கேள்வி எழவே செய்கிறது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து வடபகுதி மீனவர்களை வெட்டிக் காயப்படுத்தியுள்ளனரெனில், அதற்குப் பின்னணியில் பாரியதொரு சதித்திட்டம் இருப்பதை யாருமே நிராகரித்துவிட முடியாது.

இந்தியமீனவர்களை இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைய அனுமதிப்பதன் மூலம், வடபுலத்து மீனவர்களுடன் முரண்பாட்டை ஏற்படுத்துவதும், அதன் மூலம் தமிழக மீனவர்களையும், ஈழத் தமிழ் மீனவர்களையும் பகைக்க வைத்து தமது சதித்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதுமே இந்திய - இலங்கைக் கடற்படைகளின் சதித்திட்டம் ஆகும்.

இது பற்றி ஏற்கனவே இப் பகுதியில் பிரஸ்தாபித்திருந்தோம். அதில், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைவதைத் தடுப்பதற்காக இரண்டு தரப்பு கடற்றொழிலாளர் சங்கங்களும் தமக்குள் பேசி ஒரு சுமுகமான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் இப்பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைவதும், அவர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதுவும் தமிழ் உடன் பிறப்புகளின் உறவுகளைப் பாதித்துவிடும் என்ற வகையில் நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தியல் வாதங்களுக்கு அப்பால்,

இந்திய மீனவர்கள் பருத்தித்துறைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து அங்கு கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை வாள்கள், கத்திகள் கொண்டு வெட்டியிருப்பது வடபுலத்து மீனவர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ் உறவுகளைப் பிரிப்பதற்கு இலங்கைக் கடற்படை தீட்டிய சதித்திட்டத்திற்குள் இந்தியத் தமிழ் மீனவர்கள் சிக்கிவிட்டனர் என்பதையே இத்தாக்குதல் சுட்டி நிற்கின்றது.

இந்திய மீனவர்களுக்குப் பதில் நடவடிக்கையாக வடபுலத்து மீனவர்களும் அவர்களின் அதே பாணியில் பேசினால் நிலைமை எப்படி அமையும் என்பதை இந்திய மீனவர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒரே பார்வையில்...

யாழ். மாவட்டத்தில் இந்தத் தடவை 2 சுயேட்சைக் குழுக்களும் 8 அரசியல் கட்சிகளும் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றன.

இங்கு 9 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு வாக்களிக்கும் தகுதியை 6லட்சத்து 44ஆயிரத்து 279 பேர் பெற்றுள்ளதுடன், இவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 582 வாக்குச் சாவடிகள் நிறுவப்படவுள்ளன.

தொகுதிவாரியாக கோப்பாயில் 61 ஆயிரத்து 403 வாக்காளர்களும், நல்லூரில் 67ஆயிரத்து672 வாக்காளர்களும், ஊர்காவற்றுறையில் 51ஆயிரத்து 94 வாக்காளர்களும், வட்டுக்கோட்டையில் 61ஆயிரத்து 283 வாக்காளர்களும் காங்கேசன்துறையில் 64ஆயிரத்து 434 வாக்காளர்களும் மானிப்பாயில் 65 ஆயிரத்து 218 வாக்காளர்களும், உடுப்பிட்டியில் 54ஆயிரத்து 87 வாக்காளர்களும் பருத்துறையில் 45ஆயிரத்து 457 வாக்காளர்களும் சாவகச்சேரியில் 57ஆயிரத்து 379 வாக்காளர்களும் யாழ்ப்பாணத்தில் 51ஆயிரத்து 460 வாக்காளர்களும், கிளிநொச்சியில் 57ஆயிரத்து 975 வாக்காளர்களும் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வீ.ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு, ஐக்கியசோசலிசக் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, எம்முகம்மது ராபிக் தலைமையிலான சுயேட்சைக்குழு சுயராட்சியக் கட்சி, றுகுணு ஜனதா பக்ஷய (றுகுணு மக்கள் கட்சி) தேசிய ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியுடன் கூட்டமைத்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியனவே யாழ். மாவட்டத்தில் இருந்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

## மேற்படி தேர்தலில் போட்டியிடுவோர் விவரம் வருமாறு;

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (சின்னம்: வீடு)

மாவை சேனாதிராசா (முதன்மை வேட்பாளர்), என்.ஸ்ரீகாந்தா, சி.வி.கே. சிவஞானம், திருமதி பத்தினி சிதம்பரநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சி.சிவமகாராசா, ஜி.ஜி.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், சொலமன் சூ.சிறில், செ.கஜேந்திரன், என்.ரவிராஜ், கி.சிவனேசன்.

### சுயேட்சைக் குழு I (சின்னம்: பூட்டு)

வீ.ஆனந்தசங்கரி (முதன்மை வேட்பாளர்), ச.முத்துலிங்கம், ச.அரவிந்தன், செ.பத்மநாதன், ச.ஜோர்ச், கு.ராஜரத்தினம், சி.பொன்னுத்துரை, கி.நடராசா, பெ.சூரியமூர்த்தி, இ.சாந்தசொரூபன், இ.சங்கையா, செல்லன் கந்தையன்.

### ஐக்கிய சோசலிசக் கட்சி (சின்னம்: ஓட்டோ)

எஸ்.நகுலராஜ் (முதன்மை வேட்பாளர்), தேவசகாயம் அன்ரன், த.சுரேந்திரகுமார், அ.குகதாஸ், திருமதி என்.ஏ.ஜெயராணி, எம்.மகாடும், ஏ.ஜே.ராஜ்குமார், கே.கோவிந்தராசா, எம்.இராமநாதன், பி.கந்தையா, ஆர்.சபாரத்தினம், ஆர்.பாலசுப்பிரமணியம்.

### புதிய இடதுசாரி முன்னணி (சின்னம்: மேசை)

அ.குமாரசாமி (முதன்மை வேட்பாளர்), சு.மகேந்திரன், நா.விஜயன், ஆ.கந்தசாமி, வே.கமலராஜன், வ.கந்தையா, சி.நிமலன், நா.பொன்னையா, கா.பத்மராசா, க.தயாளன், க.தில்லைநாதன், வே.அரசரத்தினம்.

### சுயராஜ்சியக் கட்சி (சின்னம்: தண்ணீர்க் குவளை)

ஆர்.குலசேகர, குசும் ஸ்ரீ தம்மிக்கல, த.காசிநாதன், திருமதி ச.கவிதாதேவி, அ.முருகையா, திருமதி அ.புஸ்பகுமாரி, செல்வி அ.யசோதா, அ.யசோதினி, ப.லட்சுமணன், திருமதி பி.ஜெயசுதா, கு.சிவகௌரி, க.கோவர்த்தனர்.

### றுகுணு ஜனதா பக்ஷய (றுகுணு மக்கள் கட்சி) (சின்னம்: கார்)

திருமாழஜன சலித்த மெண்டிஸ் (முதன்மை வேட்பாளர்), அமில உதயங்க, கசந்தசில்வா, திருபறுரை நாரத சிறிமெண்டிஸ், அனுரா பெரகர, விஜயசிறி லலித் மெண்டிஸ், அசேலத சில்வா, பேணாட் மெண்டிஸ், மனோரித சொய்சா, அஜித் மஞ்சுளா, நிருபாதுரை கரித தாப்பிரேயு, ஜசிந்த ஜெயசிங்க.

### ஜாதிக ஹெல உறுமய (சின்னம்: சங்கு)

வண. விதாரந்தினியோ மேதானந்த தேரர் (முதன்மை வேட்பாளர்), தருகாடசீலரட்ண, எம்.தர்மசேன, பஞ்ஞாதிஸ, ரி.தர்மருஜி, வி.இந்திவெல, பி.ஜெனவன்சஹேம, டபிள்யு எஸ்.சாந்தவிமல, ஜி.விஜிதவன்ச, டபிள்யூ. சாந்த, டபிள்யு. ரட்ணசார, எம்.விமலபுத்த.

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (சின்னம்: மரம்)

சி.எஸ்.சுபியான், (முதன்மை வேட்பாளர்), காதர் இக்பால், சுபியர் எம்மன அப்தின், எம்.எஸ்.முகமட், எம்.ஆர்.நௌசாத், எம். அப்துல்காதர் நெபர், மீரா லெப்பை லெவான், எம்.எஸ்.ஜான்ஸி, எம்.அமீர் அலி, எஸ்.எம்.சிஹான், எம்.தாஜ்மதீன், கே.எம்.ஹாபீட்.

### ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர்அணி) கூட்டுக்கட்சி (சின்னம்: வீணை)

டக்ளஸ் தேவானந்தா (முதன்மை வேட்பாளர்) வே.குகேந்திரன், ந.மதனராசா, க.மணிபல்லவராஜன், சி.தவராசா, க.பாலநடராசா ஐயர், திருநாவுக்கரசு ஸ்ரீதரன் (வரதர்அணி) ச.சிவதாசன், து.பாஸ்கரன், மகேஸ்வரி வேலாயுதம், சி.சிவகுமாரன், ப.சீவரத்தினம்.

### சுயேட்சைக்குழு - II(சின்னம் கூசா)

எம்.முகமது ராபிக் (முதன்மை வேட்பாளர்), ஜே.காண்டீபன், றொபேட் வில்சன், ஆ.விக்கினேஸ்வரன், ரி.ஜெகதீபன், எஸ்.தனேஸ்வரன், ரி.யெஸ்மினா, ரி.பகீரதி, எஸ்.ஜெயவதனி, க.செல்வராணி, இ.முகுந்தன், பி.சிவகாந்தன். (உ-4,19)

தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

பிரம்மச்சாரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கும் ஒரே ஒரு காரணத்தாலேயே எல்லா விதமான கல்வியறிவையும் மிகக் கூறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும்

சுவாமி விவேகானந்தர்

புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில்

## 2 இலட்சத்து 66 ஆயிரத்து 875 பேர் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வாக்களிப்பதற்கு 2இலட்சத்து 66 ஆயிரத்து 875 பேர் இம்முறை தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல் திணைக்களத்தால் சேகரிக்கபட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளான கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் 83 ஆயிரத்து 975 வாக்காளர்களும், முல்லைத்தீவு மற்றும் மடுப் பகுதிகளில் 91 ஆயிரத்து864 வாக்காளர்களும், மட்டக்களப்பில் வாகரை பட்டிப்பளை, வெல்லாவெளி மற்றும் மண்முனை மேற்குப் பகுதிகளில்79 ஆயிரத்து 236 வாக்காளர்களும், திருகோணமலையில் மூதூர் கிழக்குப் பகுதியில் 11 ஆயிரத்து 800 வாக்காளர்களும் இம்முறை தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர்.

இவர்கள் வாக்களிப்புச் செய்வதற்கான ஒழுங்குகள் தேர்தல் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

# தமிழ்த்தேசிய விளையாட்டுவிழாவில் இன்று 13 அரையிறுதிப் போட்டிகள்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் இன்று 13 அரையிறுதிப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

கரபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி அணியை எதிர்த்து திருமலை அணி அரையிறுதியில் மோதவுள்ளது. வவுனியா அணியை எதிர்த்து முல்லைத்தீவு அணி மோதும். இதில் வெல்லும் அணி யாழ்.அணியுடன் அரையிறுதியில் மோதும்.

கிரிக்கெட் போட்டியில் யாழ். அணியை எதிர்த்து வவுனியா அணி அரையிறுதியில் மோதவுள்ளது.

கபடிப்போட்டியில் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி எதிர் மட்டக்களப்பு, வவுனியா எதிர் முல்லைத்தீவு அணிகள் மோதவுள்ளன. ஆண்கள் பிரிவில் வவுனியாவை எதிர்த்து அம்பாறை அணியும், யாழ்.அணியை எதிர்த்து மன்னார் அணியும் மோதவுள்ளன.

தாச்சிப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவு யாழ்.அணியை எதிர்த்து திருமலை அணியும் முல்லைத்தீவு அணியை எதிர்த்து கிளிநொச்சி அணியும் மோதவுள்ளன.

பெண்கள் பிரிவில் யாழ். அணியை எதிர்த்து திருமலை அணியும் , வவுனியா அணியை எதிர்த்து முல்லைத்தீவு அணியும் மோதவுள்ளன.

வலைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு அணியை எதிர்த்து மன்னார் அணி மோதவுள்ளது. முல்லைத்தீவு திருமலை அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லும் அணி யாழ். அணியுடன் மோதவுள்ளது.

கரபந்தாட்டப் போட்டியில் திருமலை அணியை எதிர்த்து மன்னார் அணி மோதவுள்ளது.

(ச.121,68)

## பிரார்த்தனைத் திருவிழா

(சில்லாலை)

யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா மார்னிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரார்த்தனைத் திருவிழாவில் அருளுரைகளை கலாநிதி டி.ஜி. எஸ்.தினகரன், கலாநிதி பால் தினகரன், கலாநிதி ஸ்டெல்லா தினகரன், சகோதரி இவாஞ்சலின் பால்தினகரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இந்நிகழ்வு தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளன. (ச-58)

## திறப்புவிழாவும் கண்காட்சியும்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்கு பொது கட்டடத்திறப்பு விழாவும் தையல் கண்காட்சியும் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனித இராயப்பர் சின்னப்பர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க உபதலைவர் திருமதி ம.அமலா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவமும் கலந்துகொள்ளவுள்ளனர். தையல் கண்காட்சி தொடர்ந்து இரு நாட்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-75)

## யுத்த நிறுத்தம்...

கொள்வதில் பாரிய சிக்கல்களை எதிர் கொள்ளவேண்டி நேரிடும்.

எனவே தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சித் தலைவர்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அனுசரித்து நடக்க வேண்டும் என்றார்.

இச் சந்திப்பில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்க்சனும் கலந்து கொண்டார். (ம)

## தமிழ்க்...

மக்களையும் உயிர்த் தியாகம் செய்து மிகவும் பலம் வாய்ந்த இராணுவ சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளும், அந்த சக்தியில் தமிழர் விடுதலைப் போராட்டமும் சர்வதேசத்தின் முன் முனைப்புடன் தலை நிமிர்ந்து நிற்கிறது.

இந்த இராணுவ பலத்தை தக்க வைப்பதன் மூலமே எமது எதிர்கால இலட்சியத்தை நாம் அடைய முடியும்.

சமாதான உடன்படிக்கையின் பின்னர் இலங்கை அரசுடன் 6 சுற்றுப் பேச்சுக்களில் நாம் கலந்து கொண்டோம். இதன் மூலம் உடன்பாடு காணப்பட்ட விடயங்களில் மூன்று வீதம் கூட நிறைவேற்றப்படவில்லை என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

இருப்பினும் ஏனைய இனங்களைப் பாதிக்காத வகையிலும் எமது தேசத்திற்கு பொருத்தமான வகையிலும் இடைக்கால நிர்வாக வரைபை நாம் முன்வைத்தோம். இதனை இலங்கையின் அரசுத் தலைமைகள் ஏற்றிருக்குமேயாயின் இலங்கைத் தீவில் மகிழ்ச்சி மிக்க வாழ்வு ஏற்பட்டிருக்கும்.

ஆனால் அதற்கு மாறாக தமிழரும் சிங்களவரும் ஏன் சர்வதேசமுமே ஏமாற்றம் அடையத் தக்க வகையில், ஆட்சிக்கலைப்பே தற்பொழுது நடைபெற்றுள்ளது.

இந்தமோசமான நிலையிலும் கூட, புலிகள் எடுத்திருக்கின்ற நிலைப்பாட்டை சர்வதேசம் வரவேற்கின்றது.

புலிகளைப் பற்றிப் பொய் பிரசாரம் செய்தவர்களை சர்வதேசம் இனம்கண்டுள்ளது. போராட்டம் தொடர்பான புலிகளின் சர்வதேச அந்தஸ்து இன்று உயர்வடைந்துள்ளது. தமிழீழ போராட்ட வரலாற்றில் இது முக்கியமான திருப்புமுனையாகும்.

இதேவேளை தமிழ் மக்கள் மீது தற்போது திணிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தேர்தலும், தமிழர் தரப்பில் மிக முக்கியமானது.

தமிழ்த் தேசியத்தை முதன்மைப் படுத்தி அதனை முன்வைக்கும் தேர்தலாக வருகின்ற பொதுத் தேர்தல் அமைகின்றது.

இந்நிலையில் தமிழர் தரப்பு ஒரு கூட்டமைபபில் ஒரே கொள்கையில், தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும், அபிவிருத்திக்கும் பொருத்தப்பாடான தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை மக்கள் முன்வைத்தது தேர்தலில் போட்டியிட முனைந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதன்மூலம் யாழ்.குடாநாட்டு மக்களின் தீர்மானம் தமிழ்த் தேசியத்தின் தீர்மானமாக வெளிப்படும் என்பதே உண்மை. இதனால் மக்கள் அனைவரும் இவ் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டியது அவசியமாகும்.

இதனாலேயே ஒன்றுபட்டு நிற்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாம் ஆதரவளித்து நிற்கின்றோம்.

ஏனெனில் இது தமிழ் மக்களின் விருப்பை மீண்டும் வலியுறுத்திக்கூறும் ஒரு சந்தர்ப்பமாகும்.

எனவே யாழ்.குடாநாட்டு மக்கள், வரலாற்று ரீதியான இனவாத சக்திகளையும், சந்தர்ப்பவாத அரசியல்வாதி களையும் தூக்கி எறிந்து விட்டு தங்களின் தனித்துவத்தை நிலை நாட்டி தமிழரின் அரசியல் சுதந்திர விடுதலையை வென்றெடுக்க முன்வர வேண்டும் எனவும் இளம்பரிதி பகிரங்க வேண்டுகோள் விடுத்தார். (இ)

## மண்டைதீவில் திறப்புவிழா

(மண்டைதீவு)

யு.என்.எச்.சிஆரின் நிதியுதவியுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையினால் மண்டைதீவில் அமைக்கப்பட்ட சமாதான சகவாழ்வு மண்டபம் இன்று முற்பகல் 11 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் டாக்டர் வை. தியாகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் த.தெட்சணாமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ந)

## சர்வதேச...

ஈடுபடவுள்ள இக் கண்காணிப்பாளர்களில் இந்தியா, அமெரிக்கா, யப்பான், கென்யா போன்ற பல்வேறு நாட்டவர்களும் அடங்குகின்றனர் என இக் குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் பி.நிர்மானுஜன் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் வன்முறைகள், வாக்கு மோசடிகள் என்பன இடம்பெறும் சாவடிகளில் வாக்கெடுப்புக்கள் இக்கண்காணிப்பாளர்களின் கண்காணிப்பறிக்கை அடிப்படையில் இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அதேவேளை இக்குழுவின் செயற்பாடு விசேட பிரதிநிதியான சாள்ஸ் ஒட்டினியு உட்பட அதிகாரிகள் இருவர் கடந்த 17ம் திகதி தொடக்கம் நேற்று வரை யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற வேட்பு மனுத்தாக்கல்களின் போது கடமையில் ஈடுபட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)

## கிளிநொச்சி...

போதிய ஆளணி வசதிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. உள்ளூர் வாகனங்களை ஒழுங்கு செய்து தேர்தலை' நல்ல முறையில் நடாத்துவதற்கு தன்னால் முடியும் என்றும் தெரிவித்தார். தேர்தல் நடாத்தும் பொருட்டு கிளிநொச்சிப்பகுதி வீதிகளில் வாகனங்கள் போய்வரக்கூடியவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளமையால், போக்குவரத்தில் எதுவித பிரச்சினையும் ஏற்படச் சந்தர்ப்பம் இல்லை என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தி.இராசநாயகம், பொது நிறுவனங்களும், அமைப்புக்களும் தமது ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு வசதி செய்து தருமாறு மனுக்கள் மூலமாகவும், நேரடியாகவும் தமக்கு பாரிய அழுத்தங்களை மேற்கொண்டு வருவதனால், கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்தி சகல வாக்காளர்கள் வாக்களிக்கக் கூடியவகையில் ஏற்பாடு செய்யுமாறும், தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து அனுமதியைப் பெற்றுத் தருமாறும் தி.இராசநாயகம் செ.பத்மநாதனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தேர்தலில்..

தேசிய அபிவிருத்திக் கட்சியின் வேட்புமனுவும், அம்பாந்தோட்டை மாவடடத்தில் சிஹல உறுமயக் கட்சியின வேட்புமனுவும், மாத்தறை மாவட்டததில் ஐக்கிய லலித் முன்னணியின வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன. (ம)

ஜீ.ரீ.இசற் – வட புனரமைப்புத்திட்டம்
பகிரங்க ஏல விற்பனை

ஜி.ரி.இசற் வட புனரமைப்புத்திட்டம் தங்களுடைய திட்டத்தில் பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள இரண்டு வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளது.

1. **Nissan Double cab pickup** (1991) தொடர் இல: 250-6780
2. **Nissan Double cab pickup** (1990) தொடர் இல: 250-6901

இந்த வாகனங்களின் ஏல விற்பனை மூலமாகப் பெறப்படும் பணம், யாழ்.அரச அதிபர் மற்றும் ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம் இணைந்து செயற்படும் நிதிக்கு நேரடியாக செலுத்தப்பட்டு அதனூடாக நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தித்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

ஏல விற்பனை நடைபெறும்: திகதி **15.03.2004** திங்கட்கிழமை.
நேரம்: மு.ப.10.00 மணி
இடம்: ஜி.ரி.இசற் - வடபுனரமைப்புத்திட்ட அலுவலகம்,
472, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இவ் ஏல விற்பனை சம்பந்தமான மேலதிக விபரங்களை 472, பிரதான வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வாகனங்களையும் பார்வையிடலாம்.

ஆலோசகர்
ஜீ.ரீ.இசற் – வட புனரமைப்புத்திட்டம்
23.02.2004 (C/7290)

மாநகரசபை – யாழ்ப்பாணம்
வெற்றுத்தார் பரல்கள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம் மாநகரசபையில் உள்ள வெற்றுத்தார் பரல்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை அறியத் தருகின்றேன்.

140 லீற்.வெற்றுத்தார் பரல்கள் ஒன்று ரூபா 150/- வற் நீங்கலாக.
240 லீற்.வெற்றுத்தார் பரல்கள் ஒன்று ரூபா 200/- வற் நீங்கலாக.
ஏலம் நடைபெறும் திகதி 02.03.2004 முற்பகல் 10.00 மணி

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2004.02.24 (C/7293)
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

ஈர விழிகளினால் இதய அஞ்சலி

மண்ணில் 13 04 2003
விண்ணில் 23 02 2004



செல்வன் தர்மகுலராஜா சஜீவன்

பிரான்சைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் தர்மகுலராஜா - சஜீவன் அவர்களது மறைவு மிகுந்த மனவேதனையும் ஆழ்ந்த அதிர்ச்சியையும் தருகிறது. இத்துயரத்தை தாங்க முடியாமல் இக்கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக சமர்ப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவை வேண்டுகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
மாமா பகீரதன் குடும்பம் (ஜேர்மனி).
மாமா முருகபத்மராஜா குடும்பம் (லண்டன்).
மாமா மனோகரன் குடும்பம் (பிரான்ஸ்).
சித்தப்பா சுமந்திரன் (லண்டன்).
(C/7291)

மரண அறிவித்தல்

செல்வன் தர்மகுலராஜா சஜீவன்

பிரான்சைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வன் தர்மகுலராஜா சஜீவன் 23.02.2004 இல் பிரான்சில் காலமானார். இவர் தர்மகுலராஜா செல்வகுமாரி தம்பதிகளின் பாசமிகு மகனாரும் கஜந்தினியின் அன்புச் சகோதரனும் நயினாதீவைச் சேர்ந்த சண்முகராஜா வரதலெட்சுமி தம்பதிகளின் அன்புப் பேரனும் மட்டுவில் தெற்கு திருமதி சின்னத்துரை செல்வராணியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரான்ஸ், T.P.No: 0033623778361 0153260689
நயினாதீவு - 07 T.P.No: 0172 524573
வே.மு.சண்முகராஜா
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை ஆரம்ப கர்த்தாவும், பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா பஜனை நிலையத் தலைவரும். (C/7292)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.